www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூன் 2007
ரூ. 5.00



# தலித் ஆட்சியா? பார்ப்பன மீட்சியா?

www.padippakam.com

# வாழ்க்கையைச் சொல்லும் தற்கொலைகள்

## விவசாயத்தில் ஏற்பட்ட கடனால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு சாவதைத் தடுக்க முன் வராத அரசு, வங்கிக் கடனைக் கட்டத் தவறியதற்காக விவசாயிகளைக் கைது செய்ய முனைப்பு காட்டுகிறது.

கர்நாடகா மாநிலம் - பீதார் மாவட்டத்தில் மட்டும், கடந்த நான்கே மாதங்களில் 25 கரும்பு விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர். தனியார்மயம்-தாராளமயம் நடைமுறைக்கு வந்த பிறகு, கடந்த 15 ஆண்டுகளில், நாடெங்கிலும் ஏறத்தாழ 1 இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போய்விட்ட கசப்பான உண்மையை, அரசாங்கமே இப்பொழுது வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ளது.


எனினும், விவசாயிகளின் இந்தத் தற்கொலைச் சாவுகள் இந்திய சமூகத்தின் பொது புத்தியில் எவ்விதமான கலக்கத்தையோ, பதற்றத்தையோ ஏற்படுத்தவில்லை. தீவிரவாதிகளின் தாக்குதலுக்குத் தரப்படும் அரசியல் முக்கியத்துவம், சந்தை பயங்கரவாதத் தாக்குதலால் நடந்து வரும் இத்தற்கொலைச் சாவுகளுக்குத் தரப்படுவதில்லை. ''அவன் விதி, செத்தான்'' என இலகுவாக, வெறும் புள்ளிவிவரமாக ஒதுக்கித் தள்ளப்படுகிறது.

''இந்தத் தற்கொலைச் சாவுகள் இறந்து போனவர்களைப் பற்றி அல்ல; அந்த இழப்பைச் சகித்துக் கொண்டு வாழ்க்கையோடு போராடும் உயிருள்ள விவசாயிகளைப் பற்றித்தான் பேசுகிறது'' என்கிறார் ஏழை விவசாயியான கமலாபாய் குதே. இவர் வசித்து வரும் மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் மட்டும் கடந்த ஆறு ஆண்டுகளில் 6,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களுள், கமலா பாயின் கணவர் பலசுராமும் ஒருவர்.

பலசுராமின் தற்கொலைக்கு நட்டஈடாக அரசாங்கம் கொடுத்த ஒரு இலட்ச ரூபாயை, கந்துவட்டிக்காரர்கள் பறித்துக் கொண்ட பிறகும், கமலா பாய்க்கு ரூ. 50,000/- கடன் பாக்கி இருந்தது. கடந்த ஆண்டு, அவர் தனது ஆறு ஏக்கர் நிலத்தில், மகாராஷ்டிர மாநில அரசு விளம்பரப்படுத்திய பி.டி. பருத்தியினைப் பயிர் செய்தார். ஆனால், விளைந்ததோ வெறும் 2 குவிண்டால்தான். இப்பொழுது கடன் ஒன்றுக்கு இரண்டாகி விட்டது. ஆறு ஏக்கர் நிலம் இருந்த போதிலும், கமலா பாய் கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். பணப் புழக்கம் அதிகம் இருக்கும் நாட்டில், 12 மணி நேரம் வேலை செய்யும் கமலாபாய்க்குக் கிடைக்கும் கூலி, 25 ரூபாய் பெறுமான சோளம்தான்.

ஆந்திர மாநிலம் அனந்தபுர் மாவட்டத்தில் வாழும் பந்தி இலட்சுமம்மாவின் கணவர் பந்தி நரசிம்மலு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்ட பொழுது, இலட்சுமம்மாவிற்கு ஆறுதல் சொல்ல ஓட்டுக் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஓடிவந்தனர். அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த, தற்போதைய ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி, ''இலட்சுமம்மாவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அரசாங்க வேலை அளிக்கப்படும்'' என வாக்குறுதி கொடுத்தார். ஆனால், ராஜசேகர ரெட்டியின் ஆட்சியில் இலட்சுமம்மாவிற்கு, கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ் கூட வேலை கிடைக்கவில்லை.

வங்கியில் வாங்கிய விவசாயக் கடனைக் கட்டத் தவறியதற்காக, ஆந்திர அரசால் சிறைத்தண்டனை அளிக்கப்பட்ட திராட்சை விவசாயி நல்லப்ப ரெட்டி.



இலட்சுமம்மா, தனது கிராமத்தில் இருந்து 18 கி.மீ. அப்பால் உள்ள நகரத்தில் தனியார் ஒப்பந்தக்காரர்களிடம் கூலி வேலைக்குச் சென்று வருகிறார். இதற்கு அவருக்கு கிடைக்கும் கூலி 60 ரூபாய்தான். இதில் 10 ரூபாய் போக்குவரத்து செலவுக்குப் போய்விடும். அவரது மகன் கோபால், உள்ளூரில் உள்ள வங்கியில் 1,500 ரூபாய் மாதச் சம்பளத்திற்கு, ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குநராக வேலை பார்க்கிறார். மூன்று பேர் கொண்ட இலட்சுமம்மாவின் குடும்பம், மாதந்தோறும் கிடைக்கும் 3,000 ரூபாய் கூலியில், குடும்பச் செலவுகளை மட்டும் ஈடு கட்டாமல், விவசாயத்தையும் நடத்த முயன்று வருகிறது. ''விளைச்சல் ஓரளவுக்கு நன்றாக இருந்தால் போதும், நாங்கள் பிழைத்துக் கொள்வோம்'' என நம்பிக்கையோடு சொல்கிறார், இலட்சுமம்மா.

விவசாயம் சூதாட்டமாக மாறிப் போன பிறகும், அத்தொழில் மீது நம்பிக்கை இழக்காமல் இருக்கும் இலட்சுமம்மா போன்ற விவசாயிகளுக்கு அரசு பெரிதாக உதவி எதுவும் செய்வதில்லை.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 22

**இதழ் 8**

ஜூன் 2007

உள்நாடு
தனிஇதழ்: ரூ.5.00
ஆண்டுசந்தா: ரூ.60.00

*வெளிநாடுகள்*
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10



*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## கிரிமினல்மயமானது தி.மு.க. வாரிசு அரசியல்

**க**ருணாநிதியின் சாணக்கிய அரசியல், பரமபத விளையாட்டில் நடப்பதைப் போல வெற்றியின் இறுதிப் படிக்கட்டில் தடுக்கி விழுந்து, சரிந்துவிட்டது. கூட்டணிக் கட்சிகளைச் சரிக்கட்டி, தனது அரசியல் எதிரியான ஜெயலலிதாவை வீழ்த்தி, இரத்தத்தின் இரத்தமான தனது மகன் மு.க.ஸ்டாலினைத் தமிழக முதல்வராக முடிசூட்டுவதற்கான எல்லாத் தடைகளையும் நீக்கிவிட்டதாகப் பெருமூச்சுவிட்டு, தன் சட்டமன்ற வாழ்வுக்குப் பொன்விழாக் கொண்டாடும் வேளையில் அரசியலில் அவர் வளர்த்த கடாவே மார்பில் முட்டிவிட்டது. கருணாநிதி தனது எழுபதாண்டு அரசியல் வாழ்வில் நடிக்காத ஒரு சில தருணங்களில் ஒன்று அவரது மருமகனும் அரசியல் சகுனியுமான முரசொலி மாறன் இறந்தபோது இடிந்து போய் கதறி அழுததாகும். முரசொலி மாறனின் இழப்புக்கு ஈடுகட்டுவதற்காக தனக்கு நெருக்கமான, விசுவாசமான, ஆங்கிலம்-இந்திப் புலமையுள்ள, உலகமயமாக்கச் சூழலுக்கேற்ற கல்வியும் பயிற்சியும் பெற்ற அரசியல்-தொழில் தரகனாக தயாநிதி மாறனைத் தெரிவு செய்தார் கருணாநிதி.

கருணாநிதியின் பிரதிநிதி என்ற முறையில் பிரதமர் மன்மோகன், காங்கிரசுத் தலைவர் சோனியா முதல் பில்கேட்சு போன்ற பன்னாட்டுத் தொழில் கழகத் தலைவர் வரை பேரங்கள் நடத்தும் அதிகாரத்தைப் பெற்றார், தயாநிதி மாறன். செய்தி ஊடகத்தில் மாறன் சகோதரர்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வெற்றிகரமான, திறமையான மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் என்ற கருத்தை உருவாக்கினார். உலக வங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் வரைவுத் திட்டப்படி நீட்டிய கோப்பில் கையொப்பமிடுவதோடு, தனது குடும்பத் தொழில் குழுமத்துக்குச் சாதகமாக ஒப்பந்தங்கள் போடுவதும் சாதனையாகச் சித்தரிக்கப்பட்டன. இருபது தொலைகாட்சி அலைவரிசைகள், ஏழு பண்பலை வானொலி அலைவரிசைகள், மூன்று நாளிதழ்கள், மூன்று பருவ இதழ்கள் ஆகியவற்றோடு தென்னக செய்தி ஊடகத் துறையில் ஏகபோக நிலையை அடைந்த மாறன் சகோதரர்கள், தகவல் தொழில் நுட்ப சாதன உற்பத்தி மற்றும் விமான சேவை என்று தமது தொழிலை விரிவுபடுத்தி, மிகக் குறுகிய காலத்திலேயே நாட்டிலேயே 13-வது பணக்கார நிறுவனமாக சன் குழுமம் வளர்ச்சியுற்றது. மேலிருந்து கட்சிக்குள்ளும் அரசியலிலும் திணிக்கப்பட்டதால் தயார் நிலையில் கிடைத்த ஆதிக்கத்தை உண்மையான செல்வாக்கென்று அவர்கள் நம்பிவிட்டனர். தயாநிதி மாறனின் அரசியல் ரீதியிலான திடீர் வளர்ச்சியும், கலாநிதி மாறனின் தொழில் ரீதியிலான அசுர வளர்ச்சியும் மாறன் சகோதரர்களிடையே அதிகார ஆசைகளைக் கிளப்பி விட்டன.

முரசொலி மாறனைப் போல கருணாநிதியின் நிழலிலேயே, அவரது குடும்பத்துக்கு விசுவாசமாகவே எப்போதும் இருப்பதற்கு அவரது பிள்ளைகளான மாறன் சகோதரர்கள் விரும்பவில்லை. தி.மு.க.வின் தலைமையையும், மாநில அதிகார மையத்தையும் இலக்கு வைத்து மாறன் சகோதரர்கள் காய்களை நகர்த்தினர். இதுதான் தி.மு.கழகத்துக்குள்ளேயும், கருணாநிதி-மாறன் குடும்பத்திற்கிடையேயும் புகைச்சல், மோதல், வாரிசுச் சண்டை என்று பல மாதங்கள் நீறுபூத்த நெருப்பாக நீடித்திருந்ததற்குக் காரணம். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தபோதும் மு.க. ஸ்டாலினைத் துணை முதல்வராக்கியும், அரசு செலவில் சென்னை சங்கமம் நடத்தியதைச் சாதனையாகக் காட்டிக் கனிமொழிக்கு எம்.பி. பதவியளித்து அரசியலில் நுழைப்பதையும் கருணாநிதி திட்டமிடுவதை அறிந்த மாறன் சகோதரர்கள், அம்முயற்சிகளைச் சீர்குலைக்கும் வேலையில் விரைந்தனர். உள்ளாட்சித் துறை அமைச்சராக உள்ள ஸ்டாலினின் நிர்வாகத் திறமையை மறைமுகமாக விமர்சனம் செய்து வருவதோடு, தாத்தாவான பிறகு கூட, இளைஞரணித் தலைவராக ஸ்டாலின் நீடிப்பதைக் குறிக்கும் வகையில் கிண்டலடித்தது மாறன் சகோதரர்களின் தினகரன். கனிமொழி தலைமையேற்று நடத்தும் ''கருத்து'' அமைப்பு மற்றும் சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளை இருட்டடிப்புச் செய்தது, சன்-தினகரன் செய்தி ஊடகம். ஆனால், கடந்த மாத ஆரம்பத்தில், கருணாநிதி கேட்டுக் கொண்டதையும் மீறி இரண்டு கருத்துக் கணிப்புகளை சன்-தினகரன் குழுமம் வெளியிட்டது. இந்தக் கணிப்புகள் தயாநிதி மாறனைத் தமிழக அரசியலில் வளரும் மாற்றுத் தலைமையாக முன்னிறுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

இந்தக் கருத்துக் கணிப்புகள் வெளியிடப்பட்ட ஓரிரு நாட்களிலேயே மதுரை மேயர், அவரது கணவன், மற்றும் முன்னாள் மேயர் தலைமையில் திரண்ட மு.க. அழகிரியின் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் தி.மு.க. ரௌடிகளால் தினகரன் நாளிதழ் எரிப்பு, நகரம் முழுவதும் பேருந்துகள் உடைப்பு, கல்லெறிதல், தினகரன்-சன் குழும அலுவலகங்கள் சூறையாடப்படுதல், தீ வைப்பு, பெட்ரோல் குண்டு வீச்சுத் தாக்குதலுக்குள்ளாகி மூன்று ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலித்தனங்கள் அனைத்தும் புகைப்படங்களாகவும் ''வீடியோ'' காட்சிகளாகவும்

படிப்பகம

ஆதாரம்-சாட்சியமாகப் பதிவு செய்யப்படுவதைப் பற்றிக் கடுகளவும் கவலைப்படாமல் போலீசுப் பாதுகாப்பு - உதவியுடன் - உடந்தையுடன் மிகவும் நிதானமாகவும், அலட்சியமாகவும் இது ''நம்ம ஆட்சி, நம்ம போலீசு'' என்ற திமிரோடும் நடத்தப்பட்டுள்ளன.



தான் சொல்லியும் கேளாமல், தினகரன் தனது கருத்துக் கணிப்பை வெளியிட்டதுதான் வன்முறைக்கு காரணம் என்றும், ஆத்திரமுற்ற கழகத் தொண்டர்கள் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டனர் என்று அழகிரியின் ரௌடித்தனத்துக்கு நியாயம் கற்பித்துள்ளார், கருணாநிதி. அவரது பொறுப்பிலுள்ள போலீசு அழகிரிக்கு உடந்தையாகவும், அவரது ஆணையின் கீழ் செயலிழந்தும் போயுள்ளது அம்பலப்பட்டுள்ள நிலையில் மத்திய அரசில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி தனது மகன் மு.க. அழகிரியைக் குற்றங்களில் இருந்து தப்புவிக்கும் நோக்கத்தோடு சி.பி.ஐ. விசாரணைக்கு பரிந்துரைத்திருக்கிறார். தர்மபுரி மாணவிகள் எரிப்புக்கு இணையான மூன்று அப்பாவி ஊழியர்கள் படுகொலையின் சூத்திரதாரி மு.க.அழகிரிதான் என்று ஊரே, நாடே அறிந்திருந்தபோதும் அவர் கைது செய்யப்படவுமில்லை; அவர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் கூட சேர்க்கப்படவில்லை; அழகிரியின் அல்லக்கைகள் சிலர் மட்டுமே பெயருக்குக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மு.க.அழகிரியின் செல்வாக்கை 'இருட்டடிப்பு' செய்து பொய்யான கருத்துக் கணிப்புகள் வெளியிட்டதனால் அவரது ஆதரவாளர்கள் ஆத்திரமடைந்து தாக்குதலில் ஈடுபட்டது இயல்பானதுதான்; அதனால் 3 ஊழியர்கள் இறக்க நேர்ந்தது ஒரு பிரச்சினையே இல்லை என்பது போலவும் கருணாநிதியின் தலைமை நடந்து கொள்கிறது. ''தி.மு.க.வின் கட்டமைப்பையே குலைத்துவிடும் முயற்சியில் மாறன் சகோதரர்கள் கடந்த சில மாதங்களாகவே இறங்கி வந்தார்கள்; ஆனாலும் கலைஞர் பொறுமை காத்தார். இப்போது தலைவருக்கே நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார், கட்சிக் கட்டுப்பாட்டைச் சீர்குலைத்து விட்டார், கட்சிக்குக் களங்கம் விளைவித்து விட்டார்'' என்று குற்றஞ்சாட்டி மத்திய அமைச்சர் பதவியைப் பறித்ததோடு, கழகத்தில் இருந்தும் தயாநிதி மாறன் தூக்கி வீசப்பட்டிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் முத்தமிழ் வித்தகர் கருணாநிதியின் அகராதியில் ஒரே பொருள் தான் இருக்கிறது. கருணாநிதியின் பிள்ளைகளிடையே ''குழப்பத்தை விதைத்து, மோதலை உருவாக்கி, கழகத் தலைமையைக் கைப்பற்ற சதி செய்தார்'' என்பதுதான் அது. ஆனால், கருணாநிதியோ, கட்சியைக் குடும்பத்தின் சொத்தாகவும், அரசு அதிகாரத்தை குடும்பத்துக்கான சொத்துச் சேர்க்கும் கருவியாகவும் கருதி, அதன் கட்டுக்கோப்புக் கலையாமல் மகன்களுக்கும், மகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் பதவி வழங்குபவர்; தனது குடும்ப வாரிசுகளுக்கிடையே சுமுகமான பஞ்சாயத்து செய்து சொத்துக்களையும், பதவிகளையும், அதிகாரத்தையும் பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிட்டு வாரிசு அரசியலின் ஆபாசங்கள் அனைத்தையும் உருவாக்கி வளர்ப்பவர்.

குடும்பச் சொத்தும் அதிகாரமும்தான் குறிக்கோள் என்றான பிறகு குடும்பத்துக்குள் குத்து வெட்டு நடப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. குடும்பத்துக்குள் குடுமிப்பிடிச் சண்டை வந்துவிட்ட காரணத்தினாலேயே பாதிக்கப்பட்ட பரிதாபத்துக்குரிய மனிதராகக் கருணாநிதியைக் கருதுவது முட்டாள்தனம். பரந்து விரிந்து கிடக்கும் தமிழகத்தையும் அரசு அதிகாரம் அளிக்கும் ஆதாயங்களையும் சுமுகமாகப் பகிர்ந்து கொண்டு வாழாமல், தனது அரசியல்வாரிசுகள் இப்படி அடித்துக் கொள்கிறார்களே என்பதும், சட்ட விரோத மாற்று அதிகார மையமாகிவிட்ட அழகிரி கும்பலால் தனது வாரிசு அரசியலுக்குக் களங்கம் ஏற்படுகிறதே என்பதும்தான் கருணாநிதியின் ''துயரம்''.

''அண்ணன் அழகிரியின் ரவுடித்தனங்களையும், கட்டைப் பஞ்சாயத்துக்களையும் எதிர்த்துக் கொண்டு மதுரையிலும், தென்மாவட்டங்களிலும் யாரும் உயிரோடு இருக்க முடியாது. அப்படிப்பட்ட கொலைகளுக்கு போலீசும் துணை நிற்கும்'' என்பதுதான் இந்தச் சம்பவத்திலிருந்து வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. மாறன் சகோதரர்களுக்கும் கருணாநிதியின் பிள்ளைகளுக்கும் இடையிலான அதிகார அரசியல் சண்டை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், அதற்காக பொதுச் சொத்துக்களைச் சூறையாடுவதும், பொதுமக்களுக்கு எதிராக வன்முறை ரௌடித்தனங்களை நடத்துவதும் அப்பாவி ஊழியர்களைப் படுகொலை செய்வதையும் யார்தான் சகித்துக் கொள்ள முடியும்?

தி.மு.க.வின் மாவட்ட செயலர் த.கிருட்டிணன் கொலை விவகாரத்தில் அழகிரிக்கு கருணாநிதி வக்காலத்து வாங்கினார்; தானே அழகிரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தபோது, இதே வகையான ரவுடித்தனங்களை அவரது கும்பல் அரங்கேற்றியபோதும் பிள்ளை பாசம் கருணாநிதியின் கண்களை மறைத்தது. தென் மாவட்டங்களில் மதுரை முத்துவுக்குப் பிறகு தேர்தலில் ஜெயிப்பதற்கு தேவையான கிரிமினல் நடவடிக்கைகளுக்காகவே கருணாநிதியால் அனுப்பி வைக்கப்பட்டு ஊட்டி வளர்க்கப்படுபவர்தான் மு.க.அழகிரி. ஆனால், கருணாநிதியின் வாரிசு - குடும்ப அரசியலையும் கிரிமினல் அரசியலையும் மறைத்துவிட்டு, ஒரு மூத்த அரசியல் தலைவருக்கு மன உளைச்சலைக் கொடுக்கும் வகையில் துரதிருஷ்டவசமான சம்பவங்கள் நடந்து விட்டதாக வருத்தம் தெரிவிக்கும் 'தோழமை'க் கட்சிகளோ, பெயர் குறிப்பிடாமல், பொத்தாம் பொதுவாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், நீதி-நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கோருகின்றன. தாமே குடும்ப-வாரிசு அரசியலை ஊட்டி வளர்க்கும் வைகோவும், சசிகலா கும்பல் வடிவில் சட்டத்துக்குப் புறம்பாக ஒரு அதிகார மையத்தை உருவாக்கிப் பராமரிக்கும் ஜெயலலிதாவும் கருணாநிதியின் வாரிசு-குடும்ப அரசியல் பற்றிக் கூச்சல் போடுவதற்கு எவ்வித யோக்கியதையும் கிடையாது.

தங்களுடைய வாழ்க்கையை நாசமாக்கும் மறுகாலனியாக்க அரசியல் குறித்து கவனம் செலுத்தாமல், யாருக்கு இளவரசுப் பட்டம் என்ற அரண்மனைக் குத்து வெட்டை அரசியலாகக் கருதிப் பேசிக் கொள்வதற்கும், பதவிக்காக அடித்துக் கொள்பவர்களில் யார் பக்கம் அதிக நியாயம் இருக்கிறது என்று வாதிட்டுக் கொள்வதற்கும் ஊடகங்கள் மக்களைப் பயிற்றுவிக்கின்றன. இது ஒரு புதிய சுவாரசியமான தொலைக்காட்சி சீரியல் போல மக்களை ஆக்கிரமிக்க நாம் அனுமதிக்கக் கூடாது. பிழைப்புவாத அரசியல், வாரிசு அரசியல், கிரிமினல் அரசியல், கோஷ்டி அரசியல் போன்ற நாடாளுமன்ற அரசியல் சீரழிவுகளின் வெளிப்பாடுதான் கருணாநிதி குடும்பம் மற்றும் மாறன் சகோதரர்களுக்கிடையிலான மோதலாக வெடித்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# உ.பி.:
# தலித் ஆட்சியா? பார்ப்பன மீட்சியா?

உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவைக்கு நடைபெற்ற, தேர்தலில் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 402 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பகுஜன் சமாஜ் கட்சி 206 இடங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. அக்கட்சியின் தலைவியான மாயாவதி, உ.பி.யில் 4-வது முறையாக முதல்வராகியுள்ளார்.

பத்திரிகைகளும் கருத்துக் கணிப்பு நிறுவனங்களும் உருவாக்கிய மணற்கோட்டைகள் அனைத்தும் சரிந்து, காங்கிரசு, பா.ஜ.க., சமாஜ்வாதி ஆகிய கட்சிகள் இத்தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளன. கடந்த தேர்தலில் 143 தொகுதிகளைக் கைப்பற்றிய சமாஜ்வாதி கட்சி இம்முறை 97 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட பா.ஜ.க. 51 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியுள்ளது. ராகுல்காந்தி சூறாவளிப் பிரச்சாரம் செய்தும் கூட காங்கிரசு கட்சி 22 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 'இடதுசாரிகள்' 46 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெறமுடியவில்லை. உ.பி.யில் பிரபலமான கட்சிகள் அனைத்தும் குப்பைத் தொட்டியில் வீசியெறியப்பட்டு விட்டன என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே குறிப்பிடுமளவுக்கு இத்தேர்தலில் மாயாவதி அலை சுழன்று வீசியது. தனிப்பெரும்பான்மையுடன் பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெற்றதன் மூலம் கடந்த 16 ஆண்டுகாலமாக உ.பி.யில் நிலவி வந்த கூட்டணி ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

"இது மகத்தான வெற்றி; இந்திய நாடாளுமன்ற அரசியல் ,வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ள வெற்றி; ஈராயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு தலித் - அதிலும் ஒரு பெண், கட்சியின் நிறுவனரான கன்ஷிராம் மறைந்துவிட்ட நிலையில், எந்தக் கட்சியுடனும் கூட்டணி சேராமல் தனித்து நின்று, பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியான மாயாவதி இம்மாபெரும் வெற்றியைச் சாதித்துள்ளார். ஒடுக்கப்பட்ட தலித் சாதியைச் சேர்ந்த மாயாவதி, இந்தியாவிலேயே மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தைக் கட்டியாளப் போகிறார்" என்று பார்ப்பன பத்திரிகைகளே வியந்து பாராட்டுமளவுக்கு இந்தியாவையே தனது தேர்தல் வெற்றியால் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் மாயாவதி.

"மாயாவதியின் வெற்றியானது, இந்தியாவின் அரசியல் போக்குகளையும் சமூக உறவுகளையும் மாற்றப் போகிறது; 2008-இல் சட்டப் பேரவைத் தேர்தல் நடக்கவுள்ள ம.பி., ராஜஸ்தான், டெல்லி ஆகிய மாநிலங்களில் இந்த வெற்றியானது தீவிரமான தொடர் விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது" என்றெல்லாம் முதலாளித்துவ அரசியல் நோக்கர்கள் ஆருடம் சொல்கிறார்கள். "உ.பி.யில் மட்டுமின்றி இந்திய நாடெங்கும் இந்த வெற்றியின் தாக்கம் தீயாய்ப் பற்றிப் பரவும்" என்கிறார் திருமாவளவன்.

சாதி அரசியலும் கிரிமினல் அரசியலும் கொடிகட்டிப் பறக்கும் உ.பி. மாநிலத்தில், தனித்து நின்று ஒரு தலித்திய கட்சியால் எப்படி இந்த வெற்றியைச் சாதிக்க முடிந்தது? பெரும்பான்மையினரான ஆதிக்கசாதி மக்களை எவ்வாறு மாயாவதியால் ஈர்க்க முடிந்தது? ஒரே வரியில் சொல்வதாயின், மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா பகிரங்கமாக அறிவித்ததைப் போல, மாயாவதியும் தனது கட்சியின் கொள்கைகளைத் தலைகீழாக மாற்றிக் கொண்டு விட்டார். அதனாலேயே அவரால் இவ் வெற்றியைச் சாதிக்க முடிந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை "திலக், தராஜூ, அவுர் தல்வார், இன்கோ மாரோ ஜூட்சார்" என்று மேடைகளில் முழங்கியவர்தான் மாயாவதி. அதாவது, திலக் - நெற்றியில் பொட்டு வைக்கும் பார்ப்பனரையும், தராஜூ - பனியா எனும் வணிக சாதியினரையும், தல்வார் - தலைப்பாகை அணியும் ராஜபுத்திர சத்திரிய சாதியினரையும் செருப்பால் - (தாழ்த்தப்பட்டோரில் ஒரு பிரிவினரது தொழில்) அடிப்போம் என்று அவர் முழங்கி வந்தார். ஆதிக்கசாதி இந்துக்களுக்கு எதிராக, குறிப்பாக பா.ஜ.க.வுக்கு எதிராக ஆவேசமாக முழங்கி வந்தார். "எங்கள் ஓட்டு; உங்கள் ஆட்சியா? இனி அது நடக்காது" என்று மேடைகளில் நெருப்பைக் கக்கினார்.

"சாதியத்தை உடைப்போம்; ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை ஒருங்கிணைப்போம்" என்று கன்ஷிராமை நிறுவனராகக் கொண்டு முழங்கிவந்த பகுஜன் சமாஜ் கட்சியின் கொள்கையும் லட்சியமும் மாயாவதியின் வீரவசனங்களும் ஓட்டுப் பொறுக்கி அரசியல் களத்தில் இன்று காலிப் பெருங்காய டப்பாவாகி விட்டன. "தலித் பிரச்சினையை தலித் மக்களால் மட்டுமே உணர முடியும்; தலித்துகளுக்கு தலித்துகள்தான் தலைமை தாங்க வேண்டும். தலித்துகளே, பிற கட்சிகளில் சேராதீர்கள்; பிற ஆதிக்க சாதியினரை எமது கட்சியில் சேர்க்கவே மாட்டோம்" - என்றெல்லாம் சவடால் அடித்து வந்த "பகுஜன்" சமாஜ் கட்சி இன்று பார்ப்பனர்களும் பிற ஆதிக்க சாதியினரும் முக்கிய பொறுப்புகளில் அங்கம் வகிக்கும் "சர்வஜன்" (அனைத்து சாதியினருக்குமான) கட்சியாகி விட்டது. மாயாவதியும் தமது கட்சி "சர்வஜன்" கட்சிதான் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

ஆதிக்க சாதியினரையும் அவர்களது கட்சிகளையும் மனுவாதிகள் என்று சாடிவந்த பகுஜன் சமாஜ் கட்சி, இப்போது அதே மனுவாதிகளைத் தமது கட்சியின் முக்கிய பிரமுகர்களாக பொறுப்புகளில் அமர்த்தியுள்ளது. பார்ப்பன எதிர்ப்பு - ஆதிக்க சாதி எதிர்ப்பு என்றெல்லாம் சவடால் அடித்து வந்த அக்கட்சி, இன்று மனுவாதிகளின் நம்பகமான கூட்டாளியாகி விட்டது.

கடந்த 2002 உ..பி. மாநில சட்டமன்றத் தேர்தலின்போது பார்ப்பனர்களு

www.padippakam.com

டன் சங்கமித்த மாயாவதி, தமது கட்சியின் சார்பில் 36 பார்ப்பனர்கள் உள்ளிட்டு 96 ஆதிக்க சாதியினரை வேட்பாளராக நிறுத்தினார். தற்போதைய 2007 தேர்தலில் 86 பார்ப்பனர்கள் உள்ளிட்டு 139 ஆதிக்க சாதியினரை தமது கட்சியின் வேட்பாளராக நிறுத்தினார். தலித்துகளுக்குத் தலித்துகள்தான் தலைமை தாங்க வேண்டும் என்று சவடால் அடித்துவந்த மாயாவதி, சதிஷ்சந்திர மிஸ்ரா என்ற பார்ப்பனரையே தமது கட்சியின் பொதுச் செயலாளராக்கினார். இதுதவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 பேர் கொண்ட ''சகோதரத்துவ மேம்பாட்டு கமிட்டி''கள்ளை பகுஜன் சமாஜ் கட்சி நிறுவியுள்ளது. இக்கமிட்டிகளின் தலைவர், துணைத் தலைவர் பொறுப்புகளில் பார்ப்பனர்கள் இருக்க, தாழ்த்தப்பட்டோர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு கட்சியும் பார்ப்பனர்களுக்கு இப்படி அரசியல் மேடையை அமைத்துக் கொடுத்ததில்லை என்று பார்ப்பனர்களே புகழும் அளவுக்கு மாயாவதியின் பார்ப்பன சேவை நாலு கால் பாய்ச்சலில் முன்னேறியது.

இது மட்டுமா? உ.பி.யில் 'சிறுபான்மை'யினரான பார்ப்பனர்கள் பாதுகாப்பற்ற நிலையில் பரிதவிக்கிறார்களாம். எனவே 'ஒடுக்கப்பட்ட', 'சிறுபான்மை'யினரான பார்ப்பனர்களைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் மாநிலமெங்கும் 22 வட்டார மாநாடுகளை நடத்திய மாயாவதி, கடந்த 2005-ஆம் ஆண்டில் லக்னோ நகரில் மிகப்பெரிய பார்ப்பன மாநில மாநாட்டையும் நடத்தினார். அம்பேத்கரின் புகழ்பாடி ''ஜெய் பீம்'' என்று முழங்கி வந்த தாழ்த்தப்பட்டோர், இம்மாநாட்டுப் பேரணியில் பார்ப்பனரோடு சேர்ந்து ''ஜெய் பரசுராம்'' என்று முழங்கினர். இம்மாநாட்டில் பார்ப்பனர்கள், பரசுராமனின் நினைவாக வெள்ளிக் கோடாரியை மாயாவதிக்குப் பரிசளித்து கௌரவித்தனர்.

இந்தப் பரசுராமன் என்ற பார்ப்பனர், சத்திரியர்களை (சூத்திரர்களை) கோடாரியால் தாக்கி அழித்து பார்ப்பனச் சாதியைப் பாதுகாத்து, அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டினார் என்பது பார்ப்பன புராணக் கதை. ஏடறிந்த வரலாற்றில் புஷ்யமித்ர சுங்கன் என்ற பார்ப்பன மன்னன், சத்திரிய மன்னனைக் கொன்று பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டியவன் என்பதால், பார்ப்பன ஆதிக்கச் சின்னமாகக் கருதப்படுவதைப் போல, புராண காலத்தின் பார்ப்பன ஆதிக்கச் சின்னமாக பரசுராமன் கருதப்படுகிறான். பரசுராமனைப் போல, தலித் சகோதரி மாயாவதியும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே பார்ப்பனர்கள் இம்மாநாட்டில் அவருக்கு வெள்ளிக் கோடாரியைப் பரிசளித்தனர்.



தலித்திய தலைமையின் 'வலிமை': பகுஜன் சமாஜ் கட்சியை வழிநடத்தும் பார்ப்பன பொதுச்செயலாளர் சதீஷ் சந்திர மிஸ்ரா.

வேத மந்திரங்கள் முழங்க பார்ப்பனர்கள் இம்மாநாட்டில் தனக்களித்த வரவேற்பைக் கண்டு பூரித்துப் போன மாயாவதி, ''எங்கள் கட்சியின் தேர்தல் சின்னம் வெறும் யானை அல்ல; பார்ப்பனர்களின் முழுமுதற் கடவுளாகிய கணேசமூர்த்தியின் அவதாரம்; அது பிரும்மா, விஷ்ணு, மகேசனின் ஒருங்கிணைந்த உருவம். எங்கள் கட்சியை பார்ப்பனர்களுக்கும் மேல்சாதியினருக்கும் எதிரான கட்சி என்று சிலர் பொய்ப்பிரச்சாரம் செய்து வருகின்றனர். எமது நடைமுறையே இந்த அவதூறுகளை வீழ்த்தி விடும். இனிமேலும் பார்ப்பனர்கள் இதர கட்சிகளை நம்பி ஏமாற மாட்டார்கள். பார்ப்பனர்-தலித் கூட்டணியானது உ.பி.யில் புதிய மாற்றங்களையும் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வையும் கொண்டு வரும்'' என்று முழங்கினார். பின்னர், இதுவே அவரது தேர்தல் பிரச்சாரமாகியது.

சாதி அரசியல் கொடி கட்டப் பறக்கும் உ.பி. மாநிலத்தில், வெறும் தலித்- முஸ்லீம் கூட்டணியை வைத்துக் கொண்டு சாதிய ஓட்டு வங்கிகளைத் தகர்த்து அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பதைப் புரிந்து கொண்டதாகவும், எனவேதான் தலித்-முஸ்லிம்-பார்ப்பனர் மற்றும் பிற சாதியினருடன் புதிய கூட்டணி அமைத்துள்ளதாகவும் தமது பிழைப்புவாதத்துக்கு சித்தாந்த விளக்கமளிக்கிறார் மாயாவதி. இது வெளியே தெரிந்த உண்மை. தமது சாதிய ஆதிக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் பகுஜன் சமாஜ் கட்சியால் எந்த இடையூறும் ஏற்படாது என்ற உத்தரவாதமும் நம்பிக்கையும் கிடைத்ததால்தான், பார்ப்பனர்களும் மற்றும் பிற ஆதிக்க சாதியினரும் பகுஜன் சமாஜ் கட்சியை தமது சொந்தக் கட்சியாகக் கருதி ஆதரிக்கின்றனர் இது வெளியே தெரியாத உண்மை.


படிப்பகம்

www.padippakam.com



லக்னோ நகரில் 2005-ஆம் ஆண்டில் பகுஜன் சமாஜ் கட்சி நடத்திய பார்ப்பன மாநாட்டில், தலித் சகோதரி மாயாவதிக்கு பாப்பாத்திகள் அளிக்கும் மரியாதை.

பகுஜன் சமாஜ் கட்சியின் பொறுப்புகளில் உள்ள பார்ப்பனர்களும் ஆதிக்க சாதியினரும் தாங்கள் தீண்டாமையை எதிர்ப்பதாகவோ, தமது சாதியினர் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவரும் அடக்குமுறை - சுரண்டலை எதிர்ப்பதாகவோ வாயளவில் கூட வாக்குறுதி அளிக்கவில்லை. ஆனாலும், பார்ப்பன-ஆதிக்க சாதியினருடன் கூட்டணி கட்டிக் கொண்டு சமூக நீதியை நிலைநாட்டப் போவதாகச் சூளுரைக்கிறார் மாயாவதி.

மாயாவதியின் பார்ப்பன சேவை இன்னும் ஒருபடி முன்னேறி, இப்போது மேல்சாதியினரில் பொருளாதார ரீதியில் ஏழ்மை நிலையில் உள்ளோருக்கும் இடஒதுக்கீடு சலுகை அளிக்கவும் அவர் கிளம்பியுள்ளார். அதேநேரத்தில், ஒடுக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்டோரைக் கை தூக்கி விடுவதற்கு, நிலச் சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதைப் பற்றி அவர் வாயே திறக்கவில்லை.

எனவேதான், "இன்று உ.பி.யில் இரண்டாவது பா.ஜ.க. உருவாகியிருக்கிறது. 'உயர் ஜாதியினரை செருப்பால் அடி' என்ற போர்க்குரல் மாறி, ஹிந்துக் கடவுள்களான 'விநாயகர், பிரம்மா, விஷ்ணு, சிவன்' இவர்களைத் துதிக்கும் பாடலாக மாறி, உயர் ஜாதியினரின் மனதை குளிர வைத்திருக்கிறது. திராவிடர் கழகம் போல் கசப்பை வளர்த்துவந்த ப.ச.க. (பகுஜன் சமாஜ் கட்சி) 'பா.ஜ.க.-2' ஆக மாறியுள்ளது, உ.பி. மாநிலத்துக்கும் நாட்டுக்கும் நல்லதே" என்று "வருகிறது பா.ஜ.க. II" எனும் தலைப்பில் துக்ளக் ஏட்டில் (16.5.07) எழுதியுள்ளார், இந்துவெறி அறிவுஜீவியான எஸ்.குருமூர்த்தி. மாயாவதி அரசில் பார்ப்பனர்களுக்கு உயர்பதவிகள் அளிக்கப்பட்டுள்ளதைப் பாராட்டியும், இந்த நிலைமை மேலும் தொடர வேண்டும் என்றும் மாயாவதியின் ஆட்சி நீண்டகாலம் நீடிக்கவும் வேண்டி காசியில் வைதீக பார்ப்பன சங்கம் சிறப்பு பூசைகளையும் வழிபாடுகளையும் நடத்தியுள்ளது. இந்துத்துவத்துடன் மென்மையாக அணுகுமுறை கொண்ட நவீன இந்திரா காந்தி என்று மாயாவதிக்குப் புகழாரம் சூட்டுகிறது, இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.-இன் பத்திரிகையான "ஆர்கனைசர்".

முலயம்சிங்கின் ஊழல்-ஒடுக்குமுறை ஆட்சியின் மீதான மக்களின் வெறுப்பு; முலயம்சிங்கின் சமாஜ்வாதி கட்சியுடனான பா.ஜ.க.வின் சமரசம் - கள்ளக்கூட்டைக் கண்டு பார்ப்பன-மேல் சாதியினரின் அதிருப்தி, காங்கிரசு, 'இடது'சாரிகள் மற்றும் பிற ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனம், வானவில் கூட்டணியை உருவாக்கி அனைத்து சாதிகளும் அரசாங்கப் பதவி, சலுகை-சன்மானங்களைப் பொறுக்கித் தின்ன மாயாவதி உருவாக்கிய புதிய ஏற்பாடு — ஆகிய அனைத்தும் சேர்ந்து பகுஜன் சமாஜ் கட்சியின் மிகப் பெரிய வெற்றிக்குக் காரணமாகியுள்ளனவே தவிர, இது தலித் அரசியலின் செல்வாக்கு-வலிமையினால் ஏற்பட்ட விளைவு அல்ல.

பகுஜன் சமாஜ் கட்சியின் வெற்றியை தலித்திய பிழைப்புவாதிகளும் பார்ப்பன பத்திரிகைகளும் பலவாறாக வியந்து போற்றினாலும், இது அரசாங்கப் பதவிகளையும் சன்மானங்களையும் பொறுக்கித் தின்பதற்காக உருவாகியுள்ள சர்வஜன சாதியக் கூட்டணி தான். சமுதாயத்தை சாதி அடிப்படையில் மேலும் உறுதிப்படுத்தி, சாதியக் கலவரங்களுக்கு வித்திடும் பிற்போக்குக் கூட்டணி தான்.

இருப்பினும், உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சியின் வெற்றியானது, சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி என்கிறார் பா.ம.க.வின் ராமதாசு. உ.பி. மக்கள் மதவெறிக் கட்சியான பா.ஜ.க.வை நிராகரித்து விட்டனர் என்று கூத்தாடுகிறது, சி.பி.எம். கட்சி. மாயாவதியோ, டெல்லிக்குச் செல்வதற்கான பாதை தெளிவாகிவிட்டது என்கிறார். திருமாவளவனோ, உயர்சாதி இந்துக்கள் மாயாவதியின் தயவை நடுமளவுக்கு, மாயாவதியின் தலைமை வலிமை மிக்கதாக வளர்ந்துள்ளது என்கிறார்.

உண்மைதான்; சாதிவெறியர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு "சாதிக்காக இனி ரத்தம் சிந்த நாங்கள் தயாராக இல்லை" என்று முழங்கிய திருமாவுக்கு 'தமிழ்ப் பாதுகாப்பு இயக்க'த்தின் தலைமைப் பதவி கிடைத்தது. பார்ப்பன-ஆதிக்க சாதிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டு சர்வஜன கட்சித் தலைவியாகிவிட்ட மாயாவதிக்கு முதல்வர் பதவி கிடைத்திருக்கிறது. இதுதான் 'வலிமையான' தலித் தலைமையின் மகிமை!

புரட்சிகர அரசியல்-சித்தாந்தம் எதுவுமின்றிச் சீரழியும் இத்தகைய தலித்திய பிழைப்புவாத இயக்கங்களை நிறுவனமயமாக்கிக் கொண்டு ஆதாயமடையும் ஆளும் வர்க்கங்களும் ஆதிக்க சாதிகளும், ஒவ்வொரு ஒடுக்கப்பட்ட மனிதனுக்கும் தலை நிமிர்வைத் தந்துள்ளதாக மாயாவதியின் வெற்றியை ஏற்றிப் போற்றுகின்றன. நாமும் மாயாவதியின் வெற்றியைப் பாராட்டத்தான் வேண்டும் - தலித்தியம் என்றால் பார்ப்பன-ஆதிக்க சாதி சேவையுடன் கலந்த கடைந்தெடுத்த பிழைப்புவாதம்தான் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியதற்காக.

● தனபால்

www.padippakam.com

# சூறையாடலுக்குச் சேது சமுத்திரத் திட்டம்! அரசியல் லாவணிக்கு இராமன் பாலம்!

மன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் ஆதாம் பாலம் என்றும் ராமன் பாலம் என்றும் அழைக்கப்படும், கடலுக்கடியில் கிடக்கும் மணல் திட்டுகளை வெட்டி எடுக்கும் பணி சேது சமுத்திரத் திட்டத்திற்காக ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில், இந்து வெறி பார்ப்பன கும்பல் ''ராமர் கட்டிய பாலத்தை இடிக்காதே!'' என ஓலமிட ஆரம்பித்துள்ளது.

பா.ஜ.க., விசுவ இந்து பரிசத் போன்ற மதவெறிக் கூட்டத்துடன் சுப்பிரமணிய சாமியும், பார்ப்பன ஜெயலலிதாவும் அறிக்கை மேல் அறிக்கை விடுகின்றனர். பதிலுக்கு தி.மு.க. கூட்டணியில் இருந்தும் பதில் அறிக்கை என இராமன் பாலம் விவகாரம் சூடேறியுள்ளது.

''தொன்மையான வரலாற்றுச் சின்னமாகவும் மக்களின் நம்பிக்கைக்கு ஆதாரமாகவும் விளங்கும் பாலம்'' என்று இல.கணேசன் மணல்திட்டைக் காப்பாற்றத் துடிப்பதைக் கேட்பவர்கள், திட்டப்பணி நடைபெறும் பாதை எண்-6 வழியாக (ஆதாம் பாலம்) கால்வாய் வெட்டச் சொன்னதே முந்தைய பா.ஜ.க. அரசின் திருநாவுக்கரசர் தலைமையிலான அமைச்சகம்தான் என்பதை மறந்து விடவேண்டும்.

''ஆங்கிலேயர்கள் வரைந்த படங்கில்கூட ராமர் பாலம் இருந்தது. தற்போது இடிக்கப்படும் பாலத்தின் கற்களை இரகசியமாக கப்பலில் எடுத்துச் செல்கின்றனர். பிரதமரும் ஜனாதிபதியும் உடனே தலையிட வேண்டும்'' என்று ஊளையிடும் ஜெயா மாமியின் அ.தி.மு.க.தான், 2001 தேர்தல் அறிக்கையில் ''ஆதாம் பாலத்து மணலை அகற்றி கால்வாய் அமைக்கப்படும்'' என்று கூறியதை மறந்து விடவேண்டும்.

தயானந்த சரஸ்வதி எனும் இந்து வெறி சாமியார் ''ராமேஸ்வரம் கடல் பகுதியில் உள்ளது இயற்கையான பாலமல்ல. கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை அப்பாலத்தில் மக்கள் சென்று வந்தனர்'' என்று சொல்கிறார். அப்படியென்றால் 11-ஆம் நூற்றாண்டில் ராஜராஜ சோழன் ஏன் அப்பாலத்தைப் பயன்படுத்தாமல் கடற்படையை ஏவி ஈழம் வென்றான்? என்று அவரை யாரும் கேட்கப் போவதில்லை.

சொல்லி வைத்த மாதிரி எல்லோரும் ''அமெரிக்காவின் நாசாவே வெளியிட்டிருக்கும் செயற்கைக் கோள் படத்தில் ராமர் பாலம் இருக்கிறது'' என்கிறார்கள். நாசாவின் இணையதளமோ, கடலில் நடக்கும் இயற்கை மாற்றத்தால் உண்டான மணல்திட்டுக்களே அவை; அங்கு மனிதனால் உருவாக்கப்பட்ட எவ்விதமான கட்டிடங்களும் இல்லை எனச் சொன்னதையும், நாசா சொன்ன மணல் திட்டுக்களைப் பாலம் எனத் திரித்தவர்கள் ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தினர்தான் என்பதையும் அவர்களிடம் யாரும் இடித்துரைக்கப் போவதில்லை.


இலங்கைக்கு செல்ல, கடலைக் கடக்க பாலம் கட்டிய ராமன், பாம்பனில் இருந்து ராமேஸ்வரம் வரை எப்படிப் போனான்? புஷ்பக விமானத்திலா? அப்படியென்றால் அதிலேயே இலங்கைக்கும் சென்றிருக்கலாமே?

''ராமன் பாலத்துக்கு 15 லட்சம் வருச வரலாறுண்டு'' என்று ஜெயாவும், பா.ஜ.க.வும் சொல்கிறார்கள். ஆனால், மனித இனம் உருவாகியே 5 லட்சம் ஆண்டுகள்தானே ஆகின்றன.

ராமநாதபுரம் மாவட்டத்திலே மலைகள் ஏதும் இல்லையே! பாலம் கட்ட பெரும்பாறைகளுக்கு ராமன் என்ன செய்தான்? கரசேவை நடத்திக் கல் வரவழைக்க அன்றைக்கு அத்வானி போன்றவர்கள் இல்லையே!

இவ்வளவு 'பழமையான' பாலத்தைக் காக்க, ஏன் இவர்கள் ஆண்ட 6 ஆண்டுகளில் தொல்பொருள் சின்னமாக அதனை அறிவிக்கவில்லை? உமாபாரதி சுரங்கத்துறை அமைச்சராக இருந்தபோது அப்பகுதியில் 21 மீட்டர் வரை தோண்டிப் பார்த்தும் கட்டிடங்கள் ஏதும் தென்படாததாலா?

மண்டபத்திற்கும் இலங்கையில் உள்ள தள்ளாடிக்கும் இடையே நிலப்பாலங்களையும் மணற்திட்டுகளையும் காட்டும் படம். 1,3 என்று குறிப்பிட்டுள்ள பகுதிகளில் நிலப்பாலம் உள்ளது. 2 என்று குறிப்பிட்டுள்ள பகுதியில் (ராமன் பாலம் எனப்படும் பகுதியில்) வெறும் மணற்திட்டுகளே உள்ளன. (நன்றி: நக்கீரன்)





படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் பாக் நீரிணைப்பில் பாலம் இருந்ததா? கடலியலாளர்கள் ஜெயகரன், ''நூற்றாண்டுகளுக்கு 1 மீட்டர் வரை கடல் மட்டம் உயர்ந்து வருவதால் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழ்நாட்டுடன் தரையால் இணைக்கப்பட்டிருந்த இலங்கை, தீவாகிப் போனது'' என்பதைப் பல ஆதாரங்களுடன் சொல்கிறார். (ஆதாரம்: குமரி நில நீட்சி, ஜெயகரன்). இதேபோல ஆஸ்திரேலியாவுக்கும் பாப்புவாநியூகினி தீவுக்கும் இடையிலும் சிங்கப்பூர் - மலேசியா - இந்தோனேசியாவுக்கும் இடையிலும் நிலப்பகுதிகளை கடல் விழுங்கி வெண்மணற் திட்டுகள் அமைந்துள்ளன. அவற்றை எவரும் ராமன் பாலம் அல்லது இலட்சுமணப் பாலமாகக் கருதுவதில்லை.



''இராமன் பாலத்தை இடிக்காதே!'' - மத நம்பிக்கையின் பெயரால் ஆதாயமடையத் துடிக்கும் இந்துவெறி பா.ஜ.க.வின் சேது சமுத்திர திட்டத்தை மாற்றியமைக்கக் கோரும் போராட்டம்.

இலட்சக்கணக்கான வருடங்கள் என்ன, 5000 வருடத்துக்கு முன்னர் வெறும் தரையில் நடந்தே போய்விடக் கூடிய இடத்துக்கு பாலம் கட்டப்பட்டது என்றால் ஒன்று கட்டியவன் கூமுட்டை. அல்லது இதை நம்புபவன் கேணை.

பா.ஜ.க. உண்மையிலேயே இத்திட்டத்தை எதிர்க்கிறதா என்றால், இல்லவே இல்லை. அவர்கள் 5000 வருடங்களுக்கு முன்னர் ராமன் கட்டியதாகக் கூறப்படும் பாலத்தை இடிப்பதை மட்டுமே எதிர்க்கின்றார்களே தவிர, சேதுக்கால்வாய் திட்டத்தை எதிர்க்கவில்லை. 'எண்ணெய் தடவாமல் தலை சீவ முடியுமா?' எனக் கருணாநிதி கேட்டால் 'எண்ணெய் தடவாமலே தலை சீவுவதுதான் ஃபேசன்' எனக் கூறும் இல.கணேசன் மாற்று வழியில் தோண்டச்சொல்கிறார்.

கருணாநிதி, தன் கூட்டணியை வைத்தே 'சேது சமுத்திரத் திட்டப் பாதுகாப்புக் குழு' ஒன்றை உருவாக்கி, 'சேதுக்கால்வாய் போன்றவற்றை நிறைவேற்றவே தி.மு.க. தனிநாடு கேட்டதாகவும், மைய அரசே என்னென்ன வேண்டும் சொல்லுங்கள் எனக் கேட்டதும், தனிநாடு கொள்கையைக் கைவிட்டு இந்தியாவில் இருந்து கொண்டே சேதுக்கால்வாய் வெட்டலாமென்று பிரிவினையைக் கைவிட்டதாகவும்' புத்தம் புது திரைக்கதை ஒன்றைச்சொன்னார்.

ராமதாசோ ''இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டால் தமிழகத்தில் தொழில்வளம் பெருகும். வணிகம் வளர்ச்சி அடையும். பல துறைமுகங்கள் ஏற்பட்டு வேலை வாய்ப்புகள் பெருகும்'' என்று கற்பனையைத் தூண்டிவிடுகிறார். மார்க்சிஸ்ட் கட்சியின் சீத்தாராம் யெச்சூரியோ சிறந்ததொரு தரகு முதலாளியின் வார்த்தைகளிலேயே ''உலக அளவில் கப்பல் போக்குவரத்தில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்துறையில் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்கு இணையாக இந்தியாவும் முன்னேற வேண்டும் என்றால், இது போன்ற திட்டங்கள் அவசியம்'' என்கிறார்.

துறைமுகங்கள் வளருவதால் வேலை வாய்ப்பு பெருகும் என்பது கடைந்தெடுத்த பொய்யாகும். சேதுக்கால்வாய் திட்டம் வருவதற்கு முன்னரே 80களில் தூத்துக்குடி துறைமுகத்தில் வேலை செய்து வந்த ஆயிரக்கணக்கான டி.எஸ்.ஏ. தொழிலாளர்களை துறைமுக நவீனமயமாக்கம் இன்று வீதிக்கு எறிந்து விட்டது. துறைமுகங்கள் முழுக்க கணினிகளால் இயக்கப்படுகின்றன. 1990-களுக்குப் பின்னர் பின்பற்றப்படும் மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கையால் பல லட்சம் சிறுதொழில்கள் அழிந்துவிட்டன. கிராமங்களின் கைவினைஞர்களும், விவசாயிகளும் பெருநகரங்களை நோக்கி படையெடுக்கின்றனர். ஏற்கெனவே இருந்த வாழ்வை அழித்து விட்டு சேதுக்கால்வாய் மூலம் தொழில் பெருகும், வணிகம் பெருகும் என்று சொல்வதில் கடுகளவும் பொருளில்லை.

'தமிழனின் கனவுத் திட்டம்' என்று சொல்லப்படும் சேதுசமுத்திரத் திட்ட கால்வாய்க் கனவையே பிரிட்டிஷ் காரன்தான் உருவாக்கினான். 1860-களில் பஞ்சங்களை உருவாக்கிய வெள்ளை ஏகாதிபத்தியம் பருத்தி, அவுரி போன்றவற்றையும் தேக்கு போன்ற மரங்களையும் விரைவாய்க் கொண்டு செல்ல வடிவமைத்த திட்டத்தை 'தமிழனின் கனவு'த் திட்டம் என்று சொல்வதே அடிமைப் புத்தியாகும். அன்று பிரிட்டனால் நிறைவேற்ற முடியாமல் போன இந்தத் திட்டத்தை, இன்று உலக நிதி மூலதனம் நிறைவேற்றக் கிளம்பியுள்ளது.

இத்திட்டத்தின் ஆதரவாளர்கள் ''சேதுவால் நம்நாடு மட்டுமல்ல. தென் கிழக்காசிய நாடுகளும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகளும் பயன்பெறும்; வணிகமும் தொழிலும் பெருகும்; அன்னிய முதலீடு அதிகரிக்கும்; அந்நியச் செலாவணி அதிகரிக்கும்; ஏற்றுமதி அதிகரிக்கும்; துறைமுகங்களின் சரக்குக் கையாளும் திறன் அதிகரிக்கும்'' என்று சேதுவின் உண்மை நோக்கத்தை சொல்லி விடுகிறார்கள். சென்னைக்கு அருகில் ஹோண்டாவும், ஹூண்டாயும் பல கோடி அந்நிய முதலீட்டில்தான் வந்தன. எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது? அவர்கள் கார்களை ஒருங்கிணைத்து சென்னை துறைமுகம் மூலமாகத்தான் ஏற்றுமதி செய்கின்றனர். இதன்மூலம் துறைமுகத்தில் வேலை வாய்ப்பு பெருகியுள்ளதா? இல்லவே இல்லை.

உலகில் அருகி வரும் கடல் ஆமைகள் முட்டையிடும் பகுதி என்றும் பவளப் பாறைகள் செறிந்த பகுதி என்றும் உயிரியலாளர்களால் போற்றப்படும் மன்னார் வளைகுடாவை ஏகாதிபத்தியம் சேதுக்கால்வாய் திட்டத்தின் மூலம் தனது கோரப்பசிக்குப் பலியாக்கி வருகின்றது. ஏகாதிபத்தியத்திற்காகப் போடப்படும் சேதுக்கால்வாயின் மைய நோக்கத்தைப் பற்றி யாரும் யோசிக்க விடாமல் இருக்கவே ஓட்டுக் கட்சிகள், ராமன் பாலம் கட்டினானா? இல்லையா? என்ற பட்டிமன்றத்தில் இறங்கியுள்ளன.

• கவி

www.padippakam.com

# பிரேம்குமார் பதவி நீக்கம்:
# இது தண்டனை அல்ல!

ஓய்வு பெற்ற இராணுவ சுபேதார் திரு. நல்லகாமன் அவர்கள் தொடுத்த மேல் முறையீட்டு வழக்கில் போலீசு கண்காணிப்பாளர் பிரேம்குமாருக்கும் மேலும் 3 போலீசு அதிகாரிகளுக்கும் ஒரு மாத சிறைத்தண்டனை விதித்து 3.4.07 அன்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இது குறித்த செய்தி சென்ற பு.ஜ. இதழில் வெளியாகியிருந்தது. மே 21-ஆம் தேதியன்று பிரேம்குமார் பணிநீக்கம் செய்யப்பட்டு, அதற்கான உத்தரவு அவரது வீட்டுக் கதவில் ஒட்டப்பட்டதாக காவல்துறை செய்தி வெளியிட்டுள்ளது.

நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசு ஊழியர் யாராக இருந்தாலும், எவ்வித விளக்கமும் கோராமல், மறுகணமே அவரை அரசியல் சட்டப்பிரிவு 311(அ) வின் கீழ், அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளின் படி அரசு நிரந்தர வேலை நீக்கம் செய்யும். மற்றெல்லா, அரசு ஊழியர்களின் விசயத்திலும் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை இதுதான். ஆனால், குற்றவாளி பிரேம்குமாரைப் பணிநீக்கம் செய்வதற்கு மட்டும் அரசுக்கு சுமார் ஒன்றரை மாதங்கள் தேவைப்பட்டிருக்கிறது.


இதனை வெற்றி என்று அழைக்கலாமெனில், இது திரு.நல்லகாமனின் தளராத உறுதிக்கும், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களின் கடும் உழைப்புக்கும் கிடைத்த வெற்றியே அன்றி, நிச்சயமாக இது நீதிக்குக் கிடைத்த வெற்றி அல்ல. இந்தப் பணிநீக்கம் என்பதும் கூட வேறு வழியில்லாத நிலையில் தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைதான்.

3.4.07 அன்று தீர்ப்பு வெளியானவுடனே, பிரேம்குமாரும் அவருடன் தண்டிக்கப்பட்ட மற்ற 3 போலீசு அதிகாரிகளையும் கைது செய்து சிறையில் அடைக்கும் வேலையை தமிழக காவல்துறை செய்திருக்க வேண்டும். செய்யவில்லை. பிறகு மதுரை அமர்வு நீதிமன்றத்தின் மூலம் ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்கள் பிரேம்குமாருக்கு பிடிவாரண்டு பிறப்பிக்கச் செய்தனர். அதன் பிறகும் போலீசு அசையவில்லை. பிரேம்குமாரும் மற்ற மூவரும் தலைமறைவானார்கள்.

இன்று பணிநீக்க உத்தரவை பிரேம்குமார் வீட்டுக் கதவில் ஒட்டும் காவல்துறை, அன்றே பிரேம்குமாரின் படத்தைப் போட்டு 'தலைமறைவுக் குற்றவாளி' என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருக்க வேண்டும். காசைக் கொடுத்து, கம்ப்ளெயிண்டையும் கொடுத்தால், உடனே ஆட்டோவில் வந்து இறங்கும் காக்கி உடை யோக்கியர்கள், பிரேம்குமாரின் பெண்டாட்டி, பிள்ளை, மாமன், மச்சான் அனைவரையும் அடித்து இழுத்து வந்து அண்டிராய ரோடு ஸ்டேசனில் உட்கார வைத்து, 'அய்யா எங்கே?' என்று விசாரித்திருக்க வேண்டும். ஆனால், எதுவும் நடக்கவில்லை. பிரேம்குமார் தப்பிப்பதற்குப் போதுமான அவகாசத்தைத் தான் தமிழக அரசு வழங்கியது.

அவ்காசத்தைப் பயன்படுத்திக் கொண்ட பிரேம்குமார், தான் தஞ்சை மாவட்ட போலீசு கண்காணிப்பாளராகப் பதவி வகிப்பதால் 'போலீசிடம் சரணடைவதிலிருந்து விலக்கு 'தரவேண்டும்' என்று கோரி, உச்சநீதி மன்றத்தில் உத்தரவும் வாங்கி விட்டார். இப்படியொரு சலுகை எல்லா கிரிமினல்களுக்கும் வழங்கப்படுகிறதா அல்லது 'போலீசு கிரிமினல்களுக்கு' மட்டுமே உச்சநீதி மன்றம் வழங்கும் சிறப்புச் சலுகையா என்று தெரியவில்லை. ஆனால், பொய் வாக்குமூலம் கொடுத்து உச்சநீதி மன்றத்தை ஏமாற்றிய பிரேம்குமாரின் இந்த மனுவைக் கூட தமிழக அரசு உச்சநீதி. மன்றத்தில் எதிர்க்கவில்லை.

நல்லகாமன்



தமிழக அரசின் இந்தக் கள்ள மவுனத்தை அம்பலப் படுத்தி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சென்னையில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டத்தின் வாயிலாக, இது எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தியாக வெளிவந்தது. பா.ம.க. எம்.எல்.ஏ. வேல்முருகன் இது குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார். தண்டனை விதிக்கப்பட்ட பிரேம்குமாரையும் மற்ற 3 போலீசு அதிகாரிகளையும் கைது செய்ய வேண்டும் என்று நல்லகாமன் மதுரை மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளருக்கு மனுக் கொடுத்தார். அதன் பிறகும் தமிழக அரசு அசையவில்லை.

பிறகு 4.5.07 அன்று "தண்டனை பெற்ற குற்றவாளி பிரேம்குமாரைக் கைது செய்!" என்று கோரும் போராட்டத்தை வீதிக்குக் கொண்டு வந்தனர் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மதுரை வழக்குரைஞர்கள். "அனுமதி இல்லாமல் ஆர்ப்பாட்டம் செய்வது சட்டவிரோதம்" என்று வழக்குரைஞர்களை மிரட்டிப் பார்த்தது போலீசு. "முதலில் பிரேம்குமாரைக் கைது செய்துவிட்டு அப்புறம் இங்கே வந்து சட்டத்தை நிலைநாட்டு" என்று பதிலடி கொடுத்த வழக்குரைஞர்கள், தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்தச் செய்தியும் எல்லாத் தொலைக்காட்சிகளிலும், ஊடகங்களிலும் வெளிவந்தது. அதன் பிறகும் தமிழக அரசு பிரேம்குமாரை கைது செய்யவில்லை.

இதனைத் தொடர்ந்து "தண்டனை பெற்ற குற்றவாளியான பிரேம்குமாரையும் மற்ற 3 அதிகாரிகளையும் கைது செய்யவும், பணி நீக்கம் செய்யவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது" என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகத்திடம் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் வழக்குரைஞர் ராஜு. பதிலில்லை.

பிறகு 7.5.07 அன்று மக்கள் தொலைக்காட்சியின் 'நீதியின் குரல்' நிகழ்ச்சியில் பங்கேற்ற மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்களான ராஜு, சகாதேவன் ஆகியோர், "தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஒரு போலீசு அதிகாரி என்பதால் தமிழக அரசு அவரைச் சட்ட விரோதமாகப் பாதுகாக்கிறது" என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்கள். "தன்னுடைய சாதியைச் சேர்ந்த அமைச்சர்களைக்

www.padippakam.com

கையில் போட்டுக் கொண்டு சட்டத்தை வளைக்கிறான் பிரேம்குமார்'' என்று அம்பலப்படுத்தினார் நல்லகாமன். இதற்கு அப்புறமும் அரசு அசைந்து கொடுக்கவில்லை.

இதற்கிடையில் உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்த பிரேம்குமார், சிறை செல்வதைத் தவிர்க்க பிணை மனுவையும் தாக்கல் செய்தார். ''பிரேம்குமாரின் பிணை மனுவையும், மேல் முறையீட்டு மனுவையும் நிராகரிக்க வேண்டுமென்றும், பொய்யான தகவல் கொடுத்து உச்சநீதி மன்றத்தை பிரேம்குமார் மோசடி செய்திருக்கிறார்'' என்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் உச்சநீதி மன்றத்தில் எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டது. எதையுமே காதில் போட்டுக் கொள்ளாமல், பிரேம்குமாருக்கு பிணை வழங்கியது உச்சநீதி மன்றம். உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக பிரேம்குமார் தாக்கல் செய்துள்ள மேல் முறையீட்டு மனு இப்போது உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

பிரேம்குமாருடன் ஒரு மாத தண்டனை விதிக்கப்பட்ட மற்ற 3 போலீசு அதிகாரிகளையும் கூட அரசு இந்த நிமிடம் வரை கைது செய்யவில்லை. உயர்நீதி மன்றத் தீர்ப்பை அமல்படுத்தாத அரசுக்கு எதிராக மறுபடியும் நீதி மன்றத்துக்குப் போக வேண்டும். மீண்டும் உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம், வக்கீல், வாய்தா, அலைச்சல், பணம்...!

1982-ஆம் பிப்ரவரி முதல் தேதியன்று, தன்னுடைய கட்டப் பஞ்சாயத்துக்கு கட்டுப்பட மறுத்த குற்றத்துக்காக நல்லகாமனையும், அவரது குடும்பத்தினரையும் கொலைவெறி கொண்டு தாக்கி, சங்கிலியால் பிணைத்து வாடிப்பட்டியின் தெருக்களில் இழுத்துச் சென்ற பிரேம்குமார் என்ற மிருகத்தின் வெறியாட்டம் அந்த ஒருநாளுடன் முடிந்து விட்டது. அந்தக் காக்கி உடைக் கிரிமினலைத் தண்டிக்கக் கோரி, சட்டபூர்வமாக முயற்சித்து வரும் அந்த முதியவரை 25 ஆண்டுகளாகத் துன்புறுத்தி வருகின்றது இந்த அரசமைப்பு. பிரேம்குமாரின் சித்திரவதை வாடிப்பட்டி வீதியுடன் முடிந்து விட்டது. தமிழக அரசும், நீதித்துறையும் அவரை வாடிப்பட்டியிலிருந்து டெல்லிக்கும் சென்னைக்கும் மதுரைக்கும் ஆயிரம் முறை இழுத்து அலைக்கழித்து வருகின்றன.

இந்தத் தண்டனையை அவர் அனுபவித்துக் கொண்டிருந்த அதே 25 ஆண்டுகளில்தான் வெறும் துணை ஆய்வாளராக இருந்த பிரேம்குமாரைப் படிப்படியாக உயர்த்தி, எஸ்.பி.யாகப் பதவி உயர்வு வழங்கியிருக்கிறது தமிழக அரசு. 1982-இல் நடைபெற்ற ஆர்.டி.ஓ. விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு, வலது கையால் பிரேம்குமார் மீது கிரிமினல் வழக்கு தொடுத்துவிட்டு, இடது கையால் பதவி உயர்வு வழங்கியிருக்கிறது தமிழக அரசு. கலைஞர் அரசு, ஜெயலலிதா அரசு, ஜானகி அரசு என எந்த அரசிலும் இந்தக் கிரிமினலின் கொடி மட்டும் இறங்கவேயில்லை.

ஏழு கடல், ஏழு மலை தாண்டி இலட்சக்கணக்கில் செலவு செய்து, ''ஒரு மாதச்சிறை'' என்ற இந்த 'பயங்கரமான தண்டனையை' உயர்நீதி மன்றத்தின் வாயிலிருந்து வரவழைத்த பின்னர், அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வைப்பதற்கு, அதாவது ஒரு காக்கி உடைக் குற்றவாளியைக் கைது செய்ய வைப்பதற்கு, ஒரு குடிமகன் என்ன பாடு பட வேண்டியிருக்கிறது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வதற்காகவே இந்த விவரங்களைத் தந்திருக்கிறோம். இவையெல்லாம் கடந்த ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள். இப்படி 300 மாதங்கள் - 25 ஆண்டுகள் - கடந்திருக்கின்றன, இந்த 'நீதி'யை வாங்குவதற்கு!



பிரேம்குமார்

''25 ஆண்டு காலம் போராடி இந்தத் தீர்ப்பை வாங்கியிருக்கிறீர்களே, நீங்கள் நடத்தியிருக்கும் இந்தப் போராட்டத்தைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?'' என்று 'நீதியின் குரல்' நிகழ்ச்சியில் மக்கள் தொலைக்காட்சியின் நிருபர் நல்லகாமனிடம் கேட்டார். ''கோர்ட்டு கேசெல்லாம் வேலைக்கு உதவாது மாமா; நான் அவனை உலக்கையைக் கொண்டு அடிச்சிடறேன்னு என் மருமவன் அன்னைக்கே சொன்னான். வேண்டாம்பா; நாம முறையாத்தான் போகணும்''னு அன்னக்கி அவன் கிட்ட சொன்னேன். இப்ப யோசிச்சுப் பார்க்கும்போது அன்னைக்கே உலக்கையைக் கொண்டு அடிச்சிருக்கலாமேன்னு தோணுது'' என்று பதிலளித்தார் நல்லகாமன்.

25 ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்றி, சட்டம், நீதிமன்றம் ஆகியவற்றின் மீதெல்லாம் நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருந்த ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியின் வாயிலிருந்து 'இந்திய ஜனநாயகம்' வரவழைத்திருக்கும் சொற்கள் இவை - ''உலக்கையைக் கொண்டு அடிக்கணும்!''.

இந்த 'உலக்கை அடி' பிரேம்குமாருக்கு அல்ல; சட்டத்தின் ஆட்சி, நீதிமன்றத்தின் மேலாண்மை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய இந்த அரசமைப்புக்கு. இந்த மக்கள் விரோத அரசமைப்பு நீடிக்கும் வரை நல்லகாமனைப் போன்ற சாதாரணக் குடிமக்களுக்கு நீதி கிடைக்காது என்பதுதான் நல்லகாமனின் நீண்ட நெடிய போராட்டம் கூறும் நீதி.

**– பு.ஜ. செய்தியாளர்கள்.**

**உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி எஸ்.பி. பிரேம்குமார் மற்றும் 3 போலீசாரைக் கைது செய்யக் கோரி, மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய ஆர்ப்பாட்டம்.**




படிப்பகம்

# தில்லை போராட்டம்: வெற்றியை நோக்கி ஒரு படி!

தில்லைக் கோயிலில் தீட்சிதப் பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகவும் வடலூரில் வள்ளலார் வழிபாட்டு முறையைப் பார்ப்பனமயமாக்கிய சதிக்கு எதிராகவும் நடைபெற்ற போராட்டங்கள் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியிருக்கின்றன. தில்லைக் கோயில் கருவறையின் எதிரில் உள்ள திருச்சிற்றம்பல மேடையில் நின்று பக்தர்கள் தேவாரம்-திருவாசகம் பாடலாம் என்று இந்து அறநிலையத்துறையின் ஆணையர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதேபோல, மதங்களையும் உருவ வழிபாட்டையும் எல்லா சடங்கு-சம்பிரதாயங்களையும் மறுத்து வள்ளலார் ஏற்படுத்திய வடலூர் சத்திய ஞான சபையில், சிவலிங்க வழிபாடும் பார்ப்பனச் சடங்குகளும் தடை செய்யப்பட வேண்டுமென்றும் வள்ளலார் உருவாக்கிய சோதி வழிபாடு மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் இந்து அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

''தில்லைக் கோயிலின் சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம் பாடக்கூடாது'' என்று தீட்சிதப் பார்ப்பனர்கள் விதித்திருக்கும் தடைக்கு எதிராக சிவனடியார் ஆறுமுகசாமி மேற்கொண்டு வரும் போராட்டம் நெடியது. ஆதீனங்கள், மடங்கள், சைவப் பிரமுகர்கள், தமிழ் ஆர்வலர்கள், அமைப்புகள் என்று பல பேரையும் பல ஆண்டுகளாகச் சந்தித்து இந்த அநீதியைத் தட்டிக் கேட்குமாறு மன்றாடியிருக்கிறார் ஆறுமுகசாமி. தனியொரு மனிதனாக கையில் துண்டறிக்கைகளை அச்சிட்டு வைத்துக் கொண்டு, சிதம்பரம் மக்கள் மத்தியிலெல்லாம் விநியோகித்திருக்கிறார். கோரிக்கையின் நியாயத்தை மக்கள் ஆதரித்தனரெனினும், 'எல்லாம் வல்ல' தீட்சிதர்களை எதிர்த்துப் போராடுவதற்கு எந்த அமைப்பும் முன்வரவில்லை.

எனினும், மனம் தளராமல் 8.5.2000 அன்று தனியொரு மனிதனாகச் சிற்றம்பல மேடையேறித் தேவாரம் பாடினார் ஆறுமுகசாமி. அந்தக் கணமே தீட்சிதக் காலிகளால் அடித்து தூக்கியெறியப்பட்டார். கையொடிந்த நிலையிலும் அந்தக் காலிகளுக்கு எதிராகக் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். ஆனால், தீட்சிதர்களின் கூலிப்படையாகவே இயங்கும் போலீசு, திட்டமிட்டே வழக்கை பலவீனமாக்கி தீட்சிதக் காலிகளின் விடுதலைக்கு உதவியது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர்தான், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் இராஜு மூலம், தமிழ் மக்கள் இசைவிழா மேடைக்கு வந்து சேர்ந்தார் ஆறுமுகசாமி. ''தீட்சிதர்களின் கொட்டத்தை ஒடுக்குவோம். தில்லைக் கோயிலில் தமிழில் பாட வைப்போம்'' என்று விழா மேடையிலேயே அறிவித்தோம்.

2004-இல் இந்தப் பிரச்சினையை மக்கள் மத்தியில் கொண்டு சென்று போராட்டத்தையும் தொடங்கியவுடன் தங்களுடைய நிலையை நியாயப்படுத்திக் கொள்ள இந்து அறநிலையத்துறையையே பயன்படுத்திக் கொண்டது தீட்சிதர் கும்பல். இணை ஆணையர் மூலம் ''தில்லைச் சிற்றம்பல மேடையில் நின்று தேவாரம், திருவாசகம் பாடுவது மரபுக்கு விரோதமானது'' என்று ஒரு உத்தரவைப் பெற்றது. பிறகு, ''தமிழில் பாடினால் கோயிலின் புனிதம் கெட்டு விடும். சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும்'' என்று முன்சீப் கோர்ட்டில் ஒரு தடையாணையையும் வாங்கி வைத்துக் கொண்டது.

இந்தத் தடையாணைகளைத் தகர்ப்பதற்காக, கடந்த 4 ஆண்டுகளாக மனித உரிமைப் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து எமது தோழர்கள் பல்வேறு முனைகளிலும் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிதம்பரம் நகரெங்கும் பத்து நாட்களுக்கு தொடர்ச்சியாகத் தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டம், தீட்சிதர்களுக்கு எதிராக உயர்நீதி மன்றம் மற்றும் உச்சநீதி மன்றங்களில் வழக்குகள், கோயிலுக்குள் நடந்த கொலைகள், திருட்டுகள் ஆகியவற்றின் மீது வழக்கு பதிவு செய்ய மறுக்கும் போலீசுக்கு எதிரான வழக்குகள், இப்பிரச்சினையை தமிழக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்... இறுதியாக, இந்து அறநிலையத்துறை ஆணையருக்கு மேல்முறையீட்டு மனு! இம்முயற்சிகளில் பா.ம.க.வைச் சேர்ந்த வழக்குரைஞர் வி.எம்.எஸ்., முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் வி.வி.எஸ்., திரு. சக்திவேல் முருகனார் போன்றவர்கள் துணை நின்றிருக்கின்றனர். இந்த நீண்ட

இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் உத்தரவை நடைமுறைப்படுத்திடும் நோக்கில் சிதம்பரத்தில் நடைபெற்ற ஊர்வலம்.



www.padippakam.com

போராட்டத்தின் இறுதியில்தான் அறநிலையத்துறை ஆணையரின் தற்போதைய உத்தரவு வெளிவந்துள்ளது.

''தில்லைக் கோயில் தீட்சிதர்களின் தனிப்பட்ட சொத்து அல்ல; திருச்சிற்றம்பல மேடையிலிருந்து தமிழ்த் திருமுறைகளை தீட்சிதர்கள் மட்டுமே 'தொன்று தொட்டு' ஓதி வருகின்றனர் என்பது உண்மையல்ல; பக்தர்கள் வழிபடலாம், ஆனால் தமிழை உச்சரிக்கக் கூடாது என்பதும் அது கோயிலின் புனிதத்தைக் கெடுக்கும் என்பதும் தமிழுக்கு இழைக்கப்படும் பேரிழுக்காகும். கோயில் நிர்வாகத்தை தங்கள் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற உள் நோக்கத்தில் தீட்சிதர்களே உருவாக்கிய கட்டுப்பாடாகத்தான் இது தோன்றுகிறது'' என்று கூறுகிறது ஆணையரின் உத்தரவு.



பக்தர்களின் வழிபாட்டு உரிமையைத் தடை செய்வது சட்டவிரோதமானது என போலீசாரிடம் வாதாடும் ம.உ.பா.மைய வழக்குரைஞர்கள்.

எனினும், ''கால பூசைகளின்போது திருக்கோயிலால் நியமிக்கப்படும் ஓதுவார்களைத் தவிர வேறு யாரும் திருமுறைகளைப் பாடக்கூடாது; பக்தர்கள் பூசை முடிந்தபிறகுதான் பாடலாம்'' என்று கூறுகிறது இந்த உத்தரவு. 'பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்' தி.மு.க. அரசின் மழுங்கத்தனத்துக்குப் பொருத்தமான வகையிலும், தீட்சிதர்களின் சாதி உரிமையில் தலையிடாத வகையிலும் இந்த உத்தரவு வழங்கப்பட்டிருந்த போதிலும், தீட்சிதப் பார்ப்பனக் கும்பல் இதை ஏற்பதற்குக் கூடத் தயாராக இல்லை.

இந்த உத்தரவு கையில் கிடைத்தவுடனே, ''மே 17-ஆம் தேதியன்று சிற்றம்பல மேடையேறி ஆறுமுகசாமி தேவாரம் பாடுவார்'' என்ற அறிவிப்பை மனித உரிமைப் பாதுகாப்பு மையம் வெளியிட்டது. ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்கள் செங்கொடிகளுடன் திரண்டனர். விடுதலைச் சிறுத்தைகள், தி.க. ஆகியோருடன் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள் பலரும் அணிதிரண்டனர். பெரியார் சிலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டவுடன் அங்கேயே வழிமறித்தது போலீசு. ''அறநிலையத்துறையின் ஆணை இருக்கிறது, வழிபாட்டு உரிமையை மறுக்க போலீசுக்கு எந்த அதிகாரமும் இல்லை'' என்ற வாதங்கள் எதையும் போலீசு காதில் வாங்கவில்லை. தீட்சிதர்கள் முன்சீப்பு கோர்ட்டில் ஏற்கெனவே தடை வாங்கியிருப்பதாகவும், எனவே எல்லோரும் கலைந்து செல்லவேண்டும் என்றும் கூறியது போலீசு. கலைந்து செல்ல மறுத்து கொளுத்தும் வெயிலில் 4 மணி நேரம் சாலையை மறித்தனர் தோழர்கள். அனைவரையும் சுற்றி வளைத்துக் கைது செய்தது போலீசு.

பக்தர்களின் வழிபாட்டு உரிமையைத் தடை செய்வது சட்டவிரோதமானது என்று வழக்குரைஞர்கள் முன்வைத்த வாதங்கள் எதுவும் போலீசின் காதுகளில் ஏறவில்லை. ஏறாததில் வியப்புமில்லை. ஏனென்றால், தீட்சிதர்களின் கேவலமான எடுபிடிகளாகவே உடம்பை வளர்த்திருப்பவர்கள் சிதம்பரம் காவல்துறை அதிகாரிகள். கோயிலுக்குள்ளேயே நடைபெற்ற 3 கொலைகள், நகைத்திருட்டுகள், இரவு நேரத்தில் கோயிலே விபச்சார விடுதியாகவும் மதுபான கேளிக்கை விடுதியாகவும் மாற்றப்படுவது ஆகியவை பற்றிக் கொடுக்கப்பட்ட எந்தப் புகார் மீதும் எந்தக் காலத்திலும் சிதம்பரம் போலீசு வழக்கு பதிவு செய்ததில்லை. இவை பற்றி சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்று, தமிழக அரசுக்கு உயர்நீதி மன்றம் நோட்டீசு அனுப்பியிருக்கிறது. இதுதான் போலீசின் யோக்கியதை.

தங்களுக்கு அரணாக போலீசு நிற்கிறது என்ற போதிலும், இந்தப் போராட்டம் தீட்சிதர் கும்பலுக்குப் பீதியை ஏற்படுத்தி விட்டது. ''நாங்களே ஆறுமுகசாமியை உரிய மரியாதையுடன் அழைத்துச் சென்று பாட வைக்கிறோம். பிரச்சினையை இத்தோடு விட்டுவிடச் சொல்லுங்கள்'' என்று தூது விட்டது தீட்சிதர் கும்பல். 'நந்தனை உரிய மரியாதையுடன் அழைத்துச் சென்ற' இந்தக் கிரிமினல் கும்பல், அடுத்த சதிக்கு அவகாசம் வாங்குகிறது என்பதைப் புரிந்து கொண்டோம். ஆணையரின் உத்தரவுக்கு எதிராக காதும் காதும் வைத்தாற்போல உயர்நீதி மன்றத்தில் தடையுத்தரவு வாங்கி விடுவதற்கான வாய்ப்பு உள்ளதென்பதால் விழிப்புடன் இருந்தோம். எதிர்பார்த்தபடியே தமிழுக்கு இடைக்காலத் தடை கேட்டு உயர்நீதி மன்றம் வந்தார்கள். அதனையும் கடுமையாக எதிர்த்து முறியடித்தோம். இறுதியாக ஆத்திரம் தலைக்கேறிய நிலையில் ஆறுமுகசாமியை மிரட்டியிருக்கிறார்கள் தீட்சிதக் காலிகள். இது தொடர்பாக அவர் கொடுத்துள்ள புகார் மீது இந்தக் கணம் வரை போலீசு நடவடிக்கை எடுக்கவில்லை.

எத்தனை தடைகள் வந்தாலும் சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலித்தே தீரும். அதனை எந்த தீட்சிதனாலும் தடுக்க முடியாது. திருவரங்கம் கருவறைக்குள் பெரியாரையும் அம்பேத்கரையும் கொண்டு சென்ற எமது தோழர்கள் இதையும் செய்தே தீருவார்கள். ஆனால், வெறும் 250 தீட்சிதர்கள் ஒரு லட்சம் மக்கட் தொகை கொண்ட சிதம்பரத்தை எப்படி ஆட்டி வைக்க முடிகிறது? ஆறு கோடித் தமிழ் மக்களை எப்படி இழிவுபடுத்த முடிகிறது? இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோயிலாக நீடிக்க இன்னமும் அரசு ஏன் அனுமதித்திருக்கிறது? — என்ற கேள்விகளுக்குத்தான் நமக்கு விடை வேண்டும்.

•••

ஓட்டுக்கட்சிகள், அதிகார வர்க்கம், போலீசு, ஆதீனங்கள், மடங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் பார்ப்பன எடுபிடிகளான 'சூத்திரர்களின்' ஆதரவும், பார்ப்பனரல்லாத

பக்தர்களின் சொரணையற்ற நிலையும் தான் தீட்சிதர்களின் திமிரைச் சாத்திய மாக்கியிருக்கிறது. சைவத்தையும் தமிழையும் சொல்லி சொத்து சேர்த்திருக்கும் கோடீசுவரர்களான ஆதீனங்கள் ஆறுமுகசாமியைத் தம் பக்கம் அண்ட விடுவதேயில்லை. தமிழில் பாடத் தடை விதிக்கும் தீட்சிதர்களுக்கெதிராக ஒரு இலட்சம் சிதம்பரம் மக்களிடமும் கையெழுத்து வாங்கியிருக்கிறோம். ஆனால், அந்த மனுவை வாங்கிக் கொள்வதற்குக் கூட அறிவாலயம் என்ற அரசியல் ஆதீனத்துக்கு நேர மில்லை.

சிதம்பரம் நகர தி.மு.க.வினர் தீட்சிதர் குடும்பங்கள் நடத்தும் பால்ய விவாகத்துக்குத் துணை நிற்கிறார்கள். போலி



தேவாரம் பாடும் உரிமை மீண்டும் மறுப்பு; மீண்டும் கைது: சிவனடியார் ஆறுமுகசாமி.

கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஓட்டுக் கட்சித் தலைவர்களின் மனைவிமார்கள் தீட்சிதர்களிடம் பிரசாதம் வாங்கக் கையேந்தி நிற்கிறார்கள். தீட்சிதர்களைப் 'பார்ப்பான்' என்று நாங்கள் கூறுவதைக் கண்டிக்கிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. அதன் நகரத் தலைவரான மூசாவைக் (பிறப்பால் இசுலாமியர்) கோயிலுக்குள் வரவேற்று, பரிவட்டம் கட்டி மரியாதை செய்திருக்கிறார்கள் தீட்சிதர்கள் என்பது அப்புறம் நமக்குத் தெரியவந்த சேதி.

ஆறுமுகசாமி எனும் தனி மனிதர் சிற்றம்பல மேடையேறிப் பாடியிருக்கிறார். தாக்கப்பட்டும் மிரட்டப்பட்டும் தளராமல் போராடுகிறார். ஆனால், மேடைதோறும் தமிழ் கூறி வயிறு வளர்க்கும் அறிஞர்களோ, தொலைக்காட்சி மேடைகளில் தம்முடைய

# வென்றது வள்ளலார் நெறி! வீழ்ந்தது பார்ப்பனச் சதி!

**சி**தம்பரம் நடராசர் கோயிலில் அருட்பா பாடச் சென்ற வள்ளலாரை இழிவுபடுத்தி, பார்ப்பனர் அல்லாத யாரும் 'அருட்பா' பாட இயலாது என்று விரட்டியடித்தது தீட்சிதர் கும்பல். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரைத் தமது கையாளாகக் கொண்டு 'மருட்பா' எழுதி வெளியிட்டு, வள்ளலார் மீது வழக்கும் தொடர்ந்தது. வடலூரில் உத்தரஞான சிதம்பரம் என்ற சபையை நிறுவி 1872 முதல் ஏழைகளுக்கு உணவளித்து வந்த வள்ளலார், பார்ப்பனச் சடங்குகளையும், சாதிக் கொடுமையையும் மறுத்து புதியதொரு மார்க்கத்தை உருவாக்கினார். தீட்சிதர் கூட்டத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஆடூர் சபாபதி குருக்கள், வள்ளலார் கொள்கையை ஏற்பதாக நடித்து, அவர் மறைவுக்குப் பின், சைவ ஆகம நெறியைப் புகுத்தி சபையைப் பார்ப்பனமயமாக்கும் சதியைத் தொடங்கினார்.

சிவலிங்க வழிபாடு, பிரதோஷ பூசை, பூணூல் அணிந்த அர்ச்சகர், வள்ளலாருக்கே நெற்றியில் பட்டை போடுவது, சபைக்கு சொந்த மானநிலத்தை ஏப்பம் விட்டு சொத்து சேர்ப்பது என்று வள்ளலாரின் சன்மார்க்கத்தை ஒழித்து 'சைவ மார்க்கத்தை' வளர்த்தார் தற்போதைய பூசகர் சபாநாத ஒளி. ஆர்.எஸ்.எஸ். மற்றும் பொள்ளாச்சி மகாலிங்கத்தின் பின்புலத்தை வைத்துக் கொண்டு, தட்டிக் கேட்ட வள்ளலார் நெறியாளர்களை மிரட்டினார். இதற்கெதிராக வள்ளலார் நெறியாளர்கள் போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தை ஆதரித்து புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணித் தோழர்கள் பிரச்சாரம் செய்தனர். இதனையொட்டி பெரியார் தி.க. ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் மாவட்டமெங்கும் சுவரொட்டிப் பிரச்சாரமும் செய்தனர். "பார்ப்பன மதத்தை மறுத்து வாழ்ந்த வள்ளலாரை பார்ப்பனமயமாக்கும் சதியை முறியடிப்போம்!" என்ற தலைப்பில் பு.மா.இ.மு. வெளியிட்ட துண்டறிக்கை, பெரும் வரவேற்பைப் பெற்றது. தைப்பூசத்திற்குப் பல்லாயிரக்கணக்கில் வடலூருக்கு வரும் மக்களிடமும், மாதந்தோறும் பூசத்தன்று திரளும் வள்ளலார் நெறியாளர்களிடமும் இந்தப் பார்ப்பனமயமாக்கத்தை எதிர்த்துப் போராடுமாறு செஞ்சட்டை அணிந்த எமது தோழர்கள் திரளாக நின்று பிரச்சாரம் செய்தனர். துண்டறிக்கையை வரவேற்ற சன்மார்க்க சங்கத்தினர் தாமே முன் வந்து அதனை ஆயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பினர்.

வடலூர் சத்திய ஞான சபையில் வள்ளலார் வகுத்த வழியில் நடைபெறும் ஜோதி வழிபாடு.



- பார்ப்பனமயமாக்கத்துக்கு எதிரான வள்ளலார் நெறியாளர்களின் போராட்டம் மே 17-ஆம் தேதி வெற்றி பெற்றது. சபாநாத ஒளி சிவாச்சாரியார் அறநிலையத் துறையால் வெளியேற்றப்பட்டார். வள்ளலார் வகுத்த வழியில் வடலூரில் மீண்டும் வழிபாடு தொடங்கியிருக்கிறது.

www.padippakam.com

தமிழ்ப்பற்றை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்ளும் சான்றோர்களோ இந்தச் சிற்றம்பல மேடையேறும் கவுர வத்தை மட்டும் கவனமாகத் தவிர்த்து விடுகிறார்கள்.

இந்திய தேசியம் என்றாலே பார்ப்பனியம், ம.க.இ.க. மறைமுகப் பார்ப்பனியம் என்று எழுதித் தள்ளும் தமிழ்ப் 'போராளி'கள் இந்த நேரடிப் பார்ப்பனியத்தின் சிண்டைப் பிடித்து உலுக்கியிருக்கலாம். தமிழகத்துக்குள்ளேயே தமிழனை மிரட்டும் இந்த ஆபத்தை அடித்து நொறுக்கியிருக்கலாம்.

எதுவும் நடக்கவில்லை. அதனால் தான் தில்லையில் தீட்சிதர்களின் ஆட்சி தடையின்றி நடக்கிறது. 'நாங்கள்தான் செய்தோம்' என்று பெருமை பாராட்டிக் கொள்வதற்காக இவற்றையெல்லாம் கூறவில்லை. இந்தப் 'பெருமை வேண்டாமென்று ஒதுங்கியிருக்கும் கட்சிகளின் 'பெருந்தன்மையையும்', எமது அமைப்புகளின் முயற்சியைக் கவனமாக இருட்டடிப்பு செய்யும் அவர்களுடைய கீழ்மையையும் வாசகர்களுக்குப் புரிய வைப்பதற்காகக் கூறுகிறோம். அவ்வளவே.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எல்லாவிதமான அடக்குமுறைகளையும் எதிர்த்து நிற்பவர்கள். தில்லையில் தீட்சிதர்கள் ஆக்கிரமிப்பாகட்டும், வடலூரில் பார்ப்பனமயமாகட்டும், தமிழிசையில் பார்ப்பனத் திருட்டாகட்டும், சிறு வணிகத்தை ரிலையன்ஸ் ஆக்கிரமிப்பதாகட்டும் — இவை ஒவ்வொன்றுக்கும் எதிராக எம்மைப் பேச வைப்பது வர்க்கப் பார்வை. போராடத் தூண்டுவது வர்க்க உணர்வு.

"பல்வேறு அமைப்புகள் இருக்க, தேவாரம்-திருவாசகத்துக்காக நாத்திகர்களாகிய நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோமே, இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ஐயா?" என்று ஆறுமுகசாமியிடம் கேட்டார் ஒரு தோழர். "அந்தச் சிவபெருமான் உங்களை அனுப்பி வைத்திருக்கிறான்" என்று பதிலளித்தார் அந்தச் சிவனடியார்.

எங்களை 'உள்ளிருந்து ஆட்டுவிக்கும் சிவபெருமான்', பாட்டாளி வர்க்க உணர்வுதான் என்ற உண்மையை அந்தப் பெரியவர் ஒருநாள் புரிந்து கொள்வார். சிவபெருமானும் விரைவில் புரிந்து கொள்வார்.

— ம.க.இ.க., வி.வி.மு.,
பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.

# குஜராத் 'மோதல்' படுகொலைகள்:

# இதுதான் இந்து ராஷ்டிரம்!

குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத்தின் புறநகர் பகுதியில், நவம்பர் 26, 2005 அன்று சோராபுதீன் ஷேக் என்பவர் குஜராத் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். "லஷ்கர்-இ-தொய்பா என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த சோராபுதீன், முதல்வர் நரேந்திர மோடியைக் கொல்லும் நோக்கத்தோடு குஜராத்திற்கு வந்தபொழுது, போலீசாரோடு நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாக" குஜராத் போலீசு துறையைச் சேர்ந்த தீவிரவாத எதிர்ப்பு படை அதிகாரிகள் அறிவித்தனர்.

"சோராபுதீன் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும்; அவரது மனைவி கவுசர்பீ காணாமல் போனது பற்றியும் மையப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும்" எனக் கோரி, சோராபுதீனின் சகோதரர் ருபாபுதீன், உச்சநீதி மன்றத்திற்குக் கடிதமொன்று எழுதினார். அக்கடிதத்தைப் பொதுநல வழக்காக எடுத்துக் கொண்ட உச்சநீதி மன்றம், இம்மோதல் கொலையைப் பற்றி விசாரிக்குமாறு குஜராத் அரசிற்கு உத்தரவிட்டது. இம்மோதலைப் புலனாய்வு செய்த கீதா ஜோஹ்ரி என்ற அதிகாரி, "இது போலி மோதல் கொலையாக இருக்கலாம்" என அறிக்கை அளித்தார். இப்பொழுது இந்த வழக்கில் திடீர் திருப்பமாக, "சோராபுதீன் போலி மோதலில்தான் சுட்டுக் கொல்லப்பட்டார்; அவரது மனைவி கவுசர்பீயும் கொல்லப்பட்டு, அவரது சடலம் இரகசியமாக எரிக்கப்பட்டு விட்டதாக" குஜராத் அரசே உச்ச நீதி மன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளது.

இவ்வழக்கில் குற்றவாளிகளாகக் கருதப்படும் வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன், எம்.என். தினேஷ் ஆகிய மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளும்; ஆய்வாளர் என்.ஹெச்.தாபி, காவலர் சாந்தாராம் ஷர்மா; போலீசு கண்காணிப்பாளர் ராஜ்குமார் பாண்டியனின் தனி உதவியாளர் அஜய் பர்மர் உள்ளிட்டு ஆறு போலீசார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"ஹைதராபாத் நகரில் இருந்து மகாராஷ்டிராவிற்குத் தனது மனைவி கவுசர்பீ, தனது நண்பர் துளசிராம் பிரஜாபதி ஆகியோரோடு பயணம் செய்து கொண்டிருந்த சோராபுதீன் வழி மறிக்கப்பட்டு, நவம்பர் 22, 2005 அன்று நள்ளிரவில் போலீசு கண்காணிப்பாளர் ராஜ்குமார் பாண்டியன் தலைமையில் சென்ற குஜராத் மற்றும் ஆந்திர மாநில போலீசாரால் கடத்தப்பட்டது தொடங்கி, நவம்பர் 26, 2005 அன்று அகமதாபாத் நகரில் குஜராத் மாநில தீவிரவாத தடுப்புப் படையால் சோராபுதீன் சுட்டுக் கொல்லப்பட்டது வரை அனைத்தையும்" போலி மோதல் கொலையில் பங்கு கொண்ட காவலர் அஜர் பர்மர் வாக்குமூலமாக அளித்திருக்கிறார்.

சோராபுதீன் கொல்லப்பட்ட பிறகு, அவரது மனைவி கவுசர்பீ, பா.ஜ.க.வின் அகமதாபாத் நகர கவுன்சிலர் சுரேந்திரா ஜிராவாலாவுக்குச் சொந்தமான பங்களாவில் இரண்டு நாட்கள் அடைத்து வைக்கப்பட்டு, நவ. 28, 2005 அன்று அதே பங்களாவில் கொல்லப்பட்டு, பிறகு அவரது சடலம், (இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஐ.பி.எஸ். அதிகாரி) வன்சாராவின் சொந்த கிராமமான இலோலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இரகசியமாக எரிக்கப்பட்டதை குஜராத் மாநில தீவிரவாத எதிர்ப்பு போலீசு படையைச் சேர்ந்த ஓட்டுநர் நாதுசிங் ஜடேஜா வாக்குமூலமாக அளித்திருக்கிறார்.

மேலும், கடத்தி வரப்பட்ட சோராபுதீன் - கவுசர்பீ தம்பதியினரைத் தனியார் பண்ணை வீட்டில் சட்ட விரோதமாக அடைத்து வைத்திருப்பதற்கு உதவிய சதீஷ்பாய் ராம்ஜிபாய் ஷர்மா; கவுசர்பீயின் சடலத்தை எரிப்பதற்குத் தேவையான விறகினை போலீசுக்கு விற்ற பகவதி டிம்பர் மார்ட் என்ற நிறுவனத்தின் அதிபர்; கவுசர்பீயின் சடலம் எரிப்பதற்குக் கொண்டு செல்லப்பட்டபொழுது, சகதியில் சிக்கிக் கொண்ட வாகனத்தை மீட்பதற்கு போலீசாரால் அழைத்து வரப்பட்ட கிரேன் இயக்குநர் ஆகியோரும் கவுசர்பீயின் கொலை தொடர்பாகச் சாட்சியம் அளித்துள்ளனர்.


படிப்பகம்

சோராபுதீன் போலி மோதலில் கொல்லப்பட்டதற்கு, கவுசர்பீ வலுவான சாட்சியமாக இருந்திருக்கிறார். குஜராத் போலீசார், இந்த வலுவான சாட்சியத்தைக் கலைப்பதற்காகவே; ''பணம் தருகிறோம்; பாகிஸ்தானுக்கு ஓடி விடு'' என கவுசர்பீயிடம் பேரம் நடத்தியுள்ளனர். அதற்கு கவுசர்பீ ஒத்துக் கொள்ளாததால்தான், அவர் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, அதற்குப் பின் கொல்லப்பட்டிருக்கக் கூடும் எனக் கூறப்படுகிறது.

இம்மோதல் கொலையின் மற்றொரு சாட்சியான துளசிராம் பிரஜாபதி, இராசஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த ரோந்து போலீசாரால், டிச.26, 2006 அன்று குஜராத் மாநிலத்தின் எல்லைப்புற மாவட்டமான பனசகந்தாவில் உள்ள அம்பாஜி நகரில் நடந்த ''மோதலில்'' சுட்டுக் கொல்லப்பட்டார்.

சோராபுதீனைச் சுட்டுக் கொன்ற போலீசு படைக்குத் தலைமை தாங்கிய வன்சாரா, குஜராத் மாநில எல்லைப்புற போலீசு பிரிவின் போலீசு இயக்குநராகப் பதவியேற்றுக் கொண்ட இரண்டாவது வாரத்திலேயே, பிரஜாபதி அம்மாநிலத்தின் எல்லைப் பகுதியில் நடந்த 'மோதலில்' சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதும்; இம்மோதல் சோராபுதீன் கொலை பற்றிய விசாரணை ஆரம்பித்த ஒரு சில மாதங்களிலேயே நடந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், சோராபுதீன் கொலையின் மற்றொரு சாட்சியான சில்வஸ்டர் டானியல் கிறிஸ்டியன், பிரஜாபதி போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு ''காணாமல்'' போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

சோராபுதீன் கொலை தொடர்பான சாட்சியங்களை ஐ.பி.எஸ். அதிகாரி வன்சாரா ஒருபுறம் அழித்துக் கொண்டிருந்த பொழுது, இன்னொரு புறம் குஜராத் அரசின் உள்துறை அமைச்சகம் கொலை தொடர்பான விசாரணையைத் தாம தப்படுத்துவதற்கு எல்லா உள்ளடி வேலைகளையும் செய்தது.

உச்சநீதி மன்றம், இம்மோதல் கொலையை விசாரிக்குமாறு சனவரி 21,2006 அன்று குஜராத் அரசிற்கு உத்தரவிட்டது. இதனையடுத்து போலீசு உயர் அதிகாரிகளின் கூட்டத்தை நடத்திய உள்துறை துணை அமைச்சர் அமித் ஷா,



சோராபுதீன் ஷேக் மற்றும் அவரது மனைவி கவுசர்பீ.

''கவுசர்பீ, சோராபுதீனின் சட்டபூர்வ மனைவி கிடையாது; கவுசர்பீ பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் என்பதால், பாகிஸ்தானுக்குத் தப்பியோடியிருக்கலாம்'' என அண்டப்புளுகை அவிழ்த்து விட்டார். உச்சநீதி மன்ற உத்தரவு வந்து ஆறு மாதங்கள் கழித்துதான், இம்மோதல் கொலை பற்றிய விசாரணை அதிகாரியாக கீதா ஜோஹ்ரி நியமிக்கப்பட்டார்.


''இது போலி மோதல் படுகொலை'' என அவர் அளித்த முதல் அறிக்கையை, உச்சநீதி மன்றத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்காமல், குஜராத் அரசு காலதாமதப்படுத்தியது. விசாரணை தொடர்பாக ஹைதராபாத் செல்ல திட்டமிட்டிருந்த கீதா ஜோஹ்ரிக்கு, அந்நகருக்குச் செல்லும் அனுமதி மறுக்கப்பட்டது. வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன், தினேஷ் ஆகிய மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளைக் குற்றவாளிகளென கீதா ஜோஹ்ரி முடிவு செய்து அறிக்கை கொடுத்த பிறகு, அக்குற்றவாளிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடாது என கீதா ஜோஹ்ரிக்கு வாய்மொழி உத்தரவு இடப்பட்டது.

இறுதியாக, விசாரணையை தாமதப்படுத்தும் நோக்கத்துடன், கீதா ஜோஹ்ரிக்குப் பதிலாக அவரின் ''எதிரி'' ரஜ்னிஷ் ராய் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக, ரஜ்னிஷ் ராய் அம்மூன்று அதிகாரிகளைக் கைது செய்ததோடு, அவர்களை உண்மை அறியும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப் போவதாக அறிவித்தார். இதே சமயத்தில், ''கீதா ஜோஹ்ரி ஏன் மாற்றப்பட்டார்?'' என உச்சநீதி மன்றம் கேட்டதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட குஜராத் அரசு, ரஜ்னிஷ் ராயைத் தூக்கியடித்துவிட்டு, கீதா ஜோஹ்ரியை மீண்டும் விசாரணை அதிகாரியாக நியமித்தது. எனினும், கீதா ஜோஹ்ரி தன்னிச்சையாகச் செயல்படுவதைத் தடுப்பதற்காக, அவருக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது, குஜராத் அரசு.

குஜராத் மாநில காங்கிரசு கமிட்டியின் தலைவர் பரத்சிங் சோலங்கி, ''ராசஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த மார்பில் கற்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் முதலாளிகளைப் பணம் கேட்டு மிரட்டி வந்த சோராபுதீனைப் போட்டுத் தள்ள அவர்கள் விரும்பியதாகவும்; அதற்கான பேரம், பா.ஜ.க. தலைவர்கள் மூலம் வன்சாராவிடம் நடந்ததாகவும்; இதற்காக 60 இலட்ச ரூபாய் பணம் கைமாறியதாகவும்'' குற்றஞ் சுமத்தியிருக்கிறார். குஜராத் மாநில போலீசு இந்தப் பின்னணி பற்றி விசாரணை நடத்தவேயில்லை.

•••

மோடியின் தேர்தல் வெற்றிக்காகப் படுகொலை செய்யப்பட்ட முசுலீம் இளைஞர் சமீர்கான்.



**இ**து போன்ற மர்மம் நிறைந்த ''தேச பக்த கொலைகள்'' இந்து ராஷ்டிரமான குஜராத்தில் இரண்டு மாதத்திற்கு ஒன்று நடப்பதாகவும்; நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமான போலீசு அதிகாரியான வன்சாரா 9 மோதல் கொலைகளை நடத்தி, 15 பேரைக் கொன்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன், அக். 22, 2002 அன்று சமீர்கான் என்ற முசுலீம் இளைஞர் குஜராத் மாநில குற்

www.padippakam.com

றப் பிரிவு போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். வன்சாரா தலைமையில் நடந்த இம்மோதல் படுகொலை, மோடியின் அரசியல் பயணத்தில் முக்கியமான ஒன்று.

''சமீர்கான் ஜெய்ஷ்-இ-முகம்மது என்ற பாக். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவன்; பாக்.இல் பயங்கரவாதப் பயிற்சி பெற்றவன்; நரேந்திர மோடியைக் கொல்லவே குஜராத்திற்குள் நுழைந்திருக்கிறான்'' என வன்சாரா சமீர்கானைச் சுட்டுக் கொன்ற பிறகு, பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார். அப்பொழுது, குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் முழு வீச்சில் நடந்து கொண்டு இருந்தது. நரேந்திர மோடி, ''குஜராத் பெருமையைக் காப்பாற்ற உழைக்கும் என்னை முசுலீம் ஜிஹாதிகள் குறிவைக்கிறார்கள்'' எனக் கூறி, இம்மோதலைத் தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டார்.

இம்மோதல் படுகொலையை விசாரித்த குஜராத் உயர்நீதி மன்றம், ''சமீர்கான் எந்தவொரு தீவிரவாத அமைப்பையும் சார்ந்தவரோ, பாக்.இல் தீவிரவாதப் பயிற்சி பெற்றவரோ கிடையாது'' எனத் தீர்ப்பளித்தது. இப்படுகொலையை மோதலாகக் காட்ட முதலமைச்சர் அலுவலகமும், போலீசு அதிகாரிகளும் இணைந்து பல மோசடிகள் நடத்தியிருப்பதை, ஐ.கே.யாதவ், தீர்த்ராஜ் என்ற இரு உயர் போலீசு அதிகாரிகளே தங்களின் விசாரணையில் கண்டறிந்து அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஜூன் 15, 2004 அன்று அகமதாபாத் நகரின் நுழைவாயில் பகுதியில், மகாராஷ்டிராவைச் சேர்ந்த கல்லூரி மாணவி இஷ்ரத் ஜஹன் உள்ளிட்டு நான்கு முசுலீம்கள் குஜராத் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதுவும், மோடியின் உயிரை ''தீவிரவாதிகளிடமிருந்து'' காப்பாற்ற, வன்சாரா நடத்திய மோதல்தான். இம்மோதல் கொலை பற்றி தேசிய மனித உரிமைக் கமிசன் குஜராத் போலீசாருக்கு எழுதிய கடிதத்தில், ''இம்மோதல் பற்றி போலீசார் விவரித்துள்ளதில் கடுகளவுகூட அடிப்படை ஆதாரம் இல்லை'' எனக் குறிப்பிட்டுள்ளது.



இலோல் கிராமத்திலுள்ள வன்சாராவின் பண்ணை மாளிகையின் (மேல்படம்) தோட்டத்தைத் தோண்டி, கவுசர்பீயின் கொலை / எரிப்பு தொடர்பான தடயங்கள் தேடப்படுகின்றன.

பி.ஜி. வர்கீஸ் என்ற பத்திரிகையாளர், ''குஜராத்தில் 2003-க்கும் 2006-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த 21 மோதல் படுகொலை பற்றி முறையாக விசாரணை நடத்தக் கோரி உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். ''இந்த 21 மோதல் படுகொலைகளில் ஒன்றில் கூடப் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் கூடக் கைது செய்யப்பட்டவுடன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை'' என அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

●●●

அரசு பயங்கரவாதி வன்சாராவை ஆதரித்து அகமதாபாத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் இந்து மதவெறி பயங்கரவாதிகள்.



**சோ**ராபுதீன் கொலையை இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு நியாயப்படுத்தி வரும் இந்து மத வெறிக் கும்பல், இன்னொருபுறம், ''மற்ற மாநிலங்களில் போலி மோதல் கொலைகளே நடப்பதில்லையா?'' என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம் எதிர்க்கட்சிகளின் வாயை அடைத்து விட்டது.

''மோதல்'' கொலைகளின் மூலம்தான் தீவிரவாதிகளை ஒழிக்க முடியும் என்ற பொதுக் கருத்தை, ஓட்டுக் கட்சிகளும், போலீசு அதிகாரிகளும், பத்திரிக்கைகளும் இணைந்து உருவாக்கி வருகின்றன. மேலும், ''தீவிரவாதி யார்?'' என்ற கேள்விக்கு, வலதுசாரி பா.ஜ.க. தொடங்கி இடதுசாரி போலி கம்யூனிஸ்டுகள் வரை, அனைத்து ஓட்டுக் கட்சிகளின் பதிலும் ஒன்றுதான்.

அதனால்தான், காங்கிரசாலும் போலி கம்யூனிஸ்டுகளாலும் சோராபுதீன் கொலையை நியாயப்படுத்தும் மோடியின் ''தேச பக்த'' அரசியலை, எதிர்த்து நிற்க முடியவில்லை. ''சோராபுதீன் கொலையை சி.பி.ஐ. விசாரிக்கத் தேவையில்லை'' என உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டதால், காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் மூக்கறுந்து போய் நிற்கிறார்கள் என்பதே உண்மை.

மோதல் கொலைகள், தடா, பொடா போன்ற அரசு பயங்கரவாதத்தையும், ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்து மதவெறி பயங்கரவாதத்தையும் எதிர்த்து நிற்க வேண்டும் என்றால், ''நக்சல்பாரிகள், தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் போராளிகள், முசுலீம்கள் - இவர்கள்தான் தீவிரவாதிகள்'' என இந்திய ஆளும் கும்பல் உருவாக்கி வைத்துள்ள கருத்தை முதலில் அடியோடு புறக்கணிக்க வேண்டும். இல்லையென்றால், மோடி போன்ற இந்து மதவெறி பயங்கரவாதிகள் வெற்றி பெறுவதையும், வன்சாரா போன்ற காக்கிச் சட்டை கொலைகாரர்கள் ''ஹீரோ''க்களாக வலம் வருவதையும் தடுக்க முடியாது.

● குப்பன்


படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் படரும் காவி இருள்

மும்பை மாநகராட்சித் தேர்தல்களில் சிவசேனாவும்; டெல்லி மாநகராட்சித் தேர்தல் மற்றும் பஞ்சாப் சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க.வும் வெற்றி பெற்றதையடுத்து, அரசியல் அரங்கில் எதிர்வரும், நாடாளுமன்றத் தேர்தலில் இந்து மதவெறிக் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. உத்திரப்பிரதேச தேர்தல் தோல்வியை வைத்து இந்துத்துவ அரசியல் பின்னடைவுக்கு ஆளாகிவிட்டதாகவும் சில அறிஞர்கள் ஆய்வுரை எழுதக்கூடும். இந்த வெற்றி தோல்விகள் எனப்படுபவையெல்லாம் தேர்தல் அரசியல் குறித்த மக்களுடைய கண்ணோட்டத்தைத்தான் வெளிப்படுத்துகின்றனவேயன்றி, இவை இந்து பாசிசக் கும்பலின் பலம் அல்லது பலவீனத்தை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் அல்ல.

தேர்தல் அரசியலின் வெற்றி-தோல்விகளுக்கு அப்பால், சித்தாந்த ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் திரட்டப்பட்ட ஒரு பாசிச அமைப்பாக சங்கப் பரிவாரம் இருக்கிறது. தேர்தலில் தோல்வியடைந்து விட்டால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அறைக்குள் முடங்கிக் கொண்டு, அறிக்கை அரசியல் நடத்தும் பிற முதலாளித்துவக் கட்சிகளைப் போல அது முடங்கிக் கொள்வதில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, பதவிச் சண்டையாலும், உட்கட்சிப் பூசல்களாலும், பாரதிய ஜனதாக் கட்சியே முடங்கி விட்டதாக முதலாளித்துவ ஊடகங்கள் கணித்தன. நாடாளுமன்ற அரசியல் சீரழிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, கட்டுப்பாடான, ஒழுக்கமான கட்சியாகத் தன்னை சித்தரித்துக் கொள்ள முயன்றதில்தான் பா.ஜ.க. தோல்வி அடைந்ததேயன்றி, அத்தகைய சீரழிவுகள் இப்பாசிச கும்பலின் பலத்தை குன்றச் செய்துவிடவில்லை.

மறுகாலனியாக்கக் கொள்கைகளின் விளைவாக, காங்கிரசு கூட்டணி அரசின் மீது மக்களின் அதிருப்தியும் வெறுப்பும் அதிகரித்துவரும் இன்றைய சூழலில், இத்தகைய மக்கள் பிரச்சினைகள் எதற்காகவும் போராடாத அதேநேரத்தில், தன்னுடைய பார்ப்பன பாசிச நடவடிக்கைகளை சங்கப் பரிவாரம் முடுக்கி விட்டிருக்கிறது. சமீபத்திய பல நிகழ்வுகள் இதனை நிரூபிக்கின்றன.

மதம் மாறிக் காதலிக்கும் நபர்களை காவி வெறியர்கள் கடந்த காலங்களில் ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்ததற்கு பல உதாரணங்கள் உள்ளன. குஜராத்தில் தனது முசுலீம் கணவனின் உயிரைக் காக்க முனைந்த 'குற்றத்திற்காக' நடுவீதியில் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட இந்துப் பெண்ணான கீதா பென்னின் கதை நாம் அறிந்ததுதான்.

சமீபத்தில் ம.பி. மாநிலத் தலைநகர் போபாலில், அத்தகைய அபாயத்திலிருந்து மயிரிழையில் ஒரு காதல் ஜோடி தப்பியது. முசுலீம் மதத்தைச் சேர்ந்த உமரும், இந்து மதத்தைச் சேர்ந்த பிரியங்காவும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர். கடுமையான எதிர்ப்பு உருவாகக் கூடும் என அஞ்சி மும்பைக்குத் தப்பியோடி, உமர் தன்னைச் 'சுத்திகரிப்பு' சடங்கு செய்து கொண்டு, இந்துவாக மதம் மாற்றிக் கொண்டார். இருவரும் திருமணமும் செய்து கொண்டனர்.

**இந்து மதவெறியர்களால் குறி வைக்கப்பட்டுள்ள இளம் தம்பதிகள் பிரியங்கா மற்றும் உமர்.**



உடனே இந்த 'சர்வதேச'ப் பிரச்சினைக்காக பஜ்ரங் தள் களத்தில் (கலவரத்தில்) இறங்கியது. உமரின் வீட்டிற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. போபாலில் உமரின் மீது ஆள்கடத்தல் குற்றம் பதிவு செய்யப்பட்டது. உமரின் அண்ணன் போலீசால் கைது செய்யப்பட்டார். மும்பை உயர்நீதி மன்றத்தில் பாதுகாப்பு கோரி, உமரும், பிரியங்காவும் மனுத் தாக்கல் செய்தனர். அவர்களுக்கு மும்பையிலேயே தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், காவல்துறை பாதுகாப்பு வழங்கவும் மும்பை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது.

ஆனால், உமரும், பிரியங்காவும் போபாலுக்குள் நுழையக் கூடாதென்றும், மீறி நுழைந்தால் உயிர் மிஞ்சாதென்வும் பஜ்ரங் தள் அவர்களுக்கு மிரட்டல் விடுத்தது. ஏப்ரல் 12 அன்று போபாலில் இப்பிரச்சினைக்காக பந்த் நடத்தவும் அழைப்பு விடுத்தது. மேலும் இவ்வாறு 'ஆசை காட்டி மத மாற்றம் செய்யும்' முசுலீம்களிடமிருந்து இந்துப் பெண்களைக் காப்பதற்காக, 'இந்துப் பெண்கள் பாதுகாப்புக் கமிட்டி' என்றொரு அமைப்பையும் உருவாக்கியுள்ளது. "பெண்கள் ஆண்களோடு இரு சக்கர வண்டிகளில் செல்லும் பொழுது ஹெல்மெட் அணியக் கூடாது. நவீன ஆடைகள் அணியக் கூடாது" என்று தாலிபான்களை விஞ்சும் விதத்தில் பல 'கட்டுப்பாடுகளை'யும் அறிவித்திருக்கிறது, இந்த அமைப்பு. இவற்றையெல்லாம் வெளிக் கொணர்ந்து அம்பலப்படுத்திய ஸ்டார் நியூஸ் தொலைக்காட்சி நிறுவனத்தின் மும்பை அலுவலகத்தையும் தாக்கியிருக்கிறது, இந்து பாசிச குண்டர் படை.

1998-ஆம் ஆண்டு ஒரிசாவிலுள்ள டாங்ஸ் மாவட்டத்தில் கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் எனும் பாதிரியார் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டதும், குஜராத்தில் பைபிள்கள் எரிக்கப்பட்டதும், தேவாலயங்கள் தாக்கப்பட்டதும், கன்னியாஸ்திரீகள் வன்



படிப்பகம்

www.padippakam.com

புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டதும் பழைய கதைகள் அல்ல. அன்று பா.ஜ.க. ஆட்சியிலிருந்த காரணத்தினால் மட்டும் அவை நடந்துவிடவுமில்லை.

ஏப்ரல் 29-ஆம் தேதியன்று ஜெய்ப்பூரில் வால்ட்டர் மசி எனும் பாதிரியாரின் வீடு புகுந்து நிகழ்த்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல் தொலைக்காட்சிகளில் வெளிவந்து வடமாநிலங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அத்தாக்குதலை சந்தர்ப்பவசமாக படமாக்கிய ஆஜ்தக் செய்தி நிறுவனத்தின் நிருபர் சரத்குமார், ''அப்பாதிரியாரின் பரிதாபக் கதறல் என் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இப்படியொரு குரூரத்தை, உதவிக்கு ஆளில்லாத ஒற்றை மனிதனை இத்தனை பேர் ஈவிரக்கமின்றித் தாக்கியதை இது வரை நான் கண்டதேயில்லை'' என மனமுடைந்து கூறினார்.



குஜராத் இந்து மதவெறி பயங்கரவாத அரசால் கைது செய்யப்பட்ட ஓவியக் கல்லூரி மாணவர் சந்திரமோகன்.

ஊடகங்களில் வெளிவந்த இச்சம்பவத்தின் பரபரப்பு அடங்குவதற்குள், மே 6-ஆம் தேதியன்று மகாராஷ்டிரா விலுள்ள கோலாப்பூர் மாவட்டத்தின் விசுவ இந்து பரிசத் குண்டர்களால் பட்டப் பகலில் நடுவீதியில் இரு கிறித்தவ நிறுவன ஊழியர்கள் அடித்து நொறுக்கப்பட்டு, தெருத்தெருவாக இழுத்துச் செல்லப்பட்டனர். அடித்தவர்களில் ஒருவரைக் கூடக் கைது செய்யாத போலீசு, மதமாற்றம் செய்ய முயன்ற 'குற்றத்திற்காக' குற்றுயிராகக் கிடந்த இருவரையும் கைது செய்தது.

அதேநாளில் கர்நாடகாவில் கோலார் தங்க வயலுக்கு அருகிலுள்ள நரசப்பூரில் வழிபாட்டை முடித்துக் கொண்டு தேவாலயங்களிலிருந்து வெளியில் வந்த கிறித்தவர்கள் தாக்கப்பட்டனர். பத்து நாட்களில் தேவாலயம் மூடப்பட வேண்டுமென ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் எச்சரிக்கை விடுத்தனர். மே 3-ஆம் தேதியன்று சத்திஸ்கரில் பிரார்த்தனைக்காக கூடிய கிறித்தவர்களை வீடு புகுந்து தாக்கிய பஜ்ரங் தள் வெறியர்கள், அவர்களது கை, கால்களை முறித்தனர். மே 1-ஆம் தேதியன்று ஆக்ராவில் ஒரு கிறித்தவப் பள்ளி தாக்கப்பட்டது.

•••

**ஆர்.**எஸ்.எஸ்.இன் ''கண்காணிப்பு'' இப்பொழுது கல்விக் கூடங்களுக்குள்ளும் நுழைந்துவிட்டது. மே 9-ஆம் தேதியன்று குஜராத் மாநிலம் வதோதராவிலுள்ள மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவில் மாணவர்களின் ஓவியங்கள் ஆண்டுத் தேர்விற்காக ஆசிரியர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. உள்ளூர் பி.ஜே.பி. குண்டன் நீரஜ் ஜெயின் என்பவனுடைய தலைமையில் அங்கு வந்த ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், மாணவர் சந்திரமோகன் வரைந்த ஓவியங்கள் இந்துக் கடவுள்களையும், இயேசுவையும் அவமதிக்கும் விதமாக இருப்பதாகக் கூறி அவரைத் தாக்கினர்.

இங்கேயும் தாக்கியவர்கள் கைது செய்யப்படவில்லை. மாறாக தாக்கப்பட்ட சந்திரமோகன் 'மத விரோதத்தைத் தூண்டினார்' எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். ஆர்.எஸ்.எஸ். ஆதரவு துணைவேந்தர் இத்தாக்குதல் பற்றி மௌனம் சாதிக்க, மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். போராட்டங்களுக்கு போலீசு அனுமதி மறுக்கவே, மாணவர்கள் இந்துப் பாசிசத்தை அம்பலப்படுத்துமுகமாக காமரசத்தை வெளிப்படுத்தும் பழங்கால இந்திய ஓவியங்களின் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தனர்.

சந்திரமோகன் தாக்கப்படும் போது அமைதி காத்த துணைவேந்தர், இப்போது சுறுசுறுப்பாகச் செயல்பட்டார். அக்கண்காட்சியை மூட உத்தரவிட்டார். துணைவேந்தரின் நடவடிக்கையை மாணவர்கள் எதிர்த்தனர். மாணவர்களை ஆதரித்த குற்றத்துக்காக கல்லூரி முதல்வர் சிவாஜி ராவ் பணிக்கர் மே 12-ஆம் தேதியன்று பணிநீக்கம் செய்யப்பட்டார். இக்கண்காட்சிக்கு வந்த பி.ஜே.பி. உறுப்பினர்கள், ''உங்களுடைய நிர்வாணப் படங்களை நாங்கள் மாட்டுவோம்'' என்று கல்லூரி மாணவிகளை மிரட்டினர். தற்பொழுது பல்கலைக்கழகத்தின் கலை வரலாற்றுத் துறையே இழுத்து மூடப்பட்டு விட்டது. கைது செய்யப்பட்ட மாணவர் சந்திரமோகன், நாடு

**நாடாளுமன்ற அரசியல் சீரழிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, கட்டுப்பாடான, ஒழுக்கமான கட்சியாகத் தன்னை சித்தரித்துக் கொள்ள முயன்றதில்தான் பா.ஜ.க. தோல்வி அடைந்ததேயன்றி, அத்தகைய சீரழிவுகள் இப்பாசிச கும்பலின் பலத்தை குன்றச் செய்துவிடவில்லை.**

www.padippakam.com

தழுவிய எதிர்ப்பைத் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததைப் போல உத்தரபிரதேச தேர்தல் பிரச்சாரத்திற்காக பாரதிய ஜனதா ஒரு குறுந்தகடை வெளியிட்டது. சங்கப் பரிவாரம் நடத்திவரும் அருவறுக்கத்தக்க முசுலீம் எதிர்ப்பு வெறி பிரச்சாரத்தின் அனைத்து முடை நாற்றமும் 'பாரதத்தின் குரல்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் 'இக்குறுந்தகட்டில் நாடக வடிவில் பச்சையாகவே பதிவாகியிருக்கிறது.


''இந்துக்கள் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு சும்மாயிருப்பார்கள். ஆனால், முசுலீம்கள் ஐந்து கல்யாணம் பண்ணிக் கொண்டு 35 நாய்களைப் பெற்றெடுத்து நாட்டையே முசுலீம் நாடாக்கி விடுவார்கள்.'' (முசுலீம்கள் கூறுவது போன்ற காட்சியில்) ''ஹா! ஹா! ஹா! இந்துப் பெண்கள் நம்மிடம் சிக்கிக் கொண்டு திணறும் பொழுது கத்திக் கூச்சலீடுவார்கள். ஆனால் அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லை. நாம் மிகுந்த மகிழ்ச்சியடைவோம். ஹா! ஹா! ஹா''.

''பி.ஜே.பி.க்கு ஓட்டுப் போடவில்லையென்றால் நீங்கள் வருத்தப்பட வேண்டியிருக்கும். இந்த நாடு அடிமையாகி விடும். உங்கள் நெற்றியில் உள்ள திலகங்களை அழித்துவிட்டு நீங்கள் தாடி வளர்க்க வேண்டியிருக்கும்.''

தேர்தலுக்கு முன் இந்தக் குறுந்தகடுப் பிரச்சினையையொட்டி பயங்கரமாகச் சண்டமாருதம் செய்த தேர்தல் ஆணையம், இதற்காக எந்தத் தலைவரையும் கிரிமினல் வழக்கில் கைது செய்யவில்லை என்பதையும் காங்கிரசு உள்ளிட்ட ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ஆரம்பகாலக் கூச்சலுக்குப் பின் மூச்சு விடவும் இல்லை என்பதையும் நாம் இங்கே நினைவிற் கொள்ளவேண்டும்.

•••

குஜராத் கலவரத்திற்குப் பிறகு நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற மோடி, அங்கே ஒரு 'ராம ராஜ்ஜியத்தை' நிறுவி விட்டான் என்றால் அது மிகையல்ல. குஜராத் கலவரத்தில் தமது உடைமைகளையும், உறவினர்களையும் இழந்து விரட்டியடிக்கப்பட்ட முசுலீம்கள் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இன்றும் தங்கள் வீடுகளுக்கு திரும்பச் செல்ல முடியவில்லை. இந்துக் குடியிருப்புகளும், முசுலீம் சேரிகளும் குஜராத்தில் தனித்தனித் தீவுகளாக பிரிக்கப்பட்டு விட்டன. படுகொலைகளுக்காக



முசுலீம்கள் மீது அவதூறையும், வெறுப்பையும் உமிழும் ''பாரதத்தின் குரல்'' என்ற ஒளிநாடாவை வெளியிடும் உ.பி. மாநில பா.ஜ.க. தலைவர் லால்ஜி டாண்டன் (இடது).

குற்றம் சாட்டப்பட்டவர்கள் அங்கே வெளிப்படையாக உலவுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களும் வழக்குத் தொடுத்தவர்களும் பதுங்கி வாழ்கிறார்கள். பாபு பஜ்ரங்கி, நீரஜ் ஜெயின் போன்ற காலிகள் சட்டத்திற்கு அப்பாற்பட்ட சமூக, கலாச்சாரக் காவலர்களாக உருவெடுத்திருக்கிறார்கள். குஜராத் கலவரம் குறித்து பொதுவான மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் எடுக்கப்பட்ட 'பர்ஜானியா' என்ற திரைப்படத்தைக்கூட குஜராத்தில் வெளியிட முடியவில்லை.

உத்திரப் பிரதேசத்தில் பா.ஜ.க. வெளியிட்ட குறுந்தகட்டில் ஒரு வசனம் வருகிறது. ''தான் இந்துவென்று அழைத்துக் கொள்ளவே அஞ்சவும், நம்மை ஆத்மாராமென்றோ, ராதா கிருஷ்ணன் என்றோ, சோகன்லால் என்றோ, மோகன்லால் என்றோ அழைத்துக் கொள்ளவே அஞ்சும் நாள் வெகு தொலைவில் இல்லை. நாம் எங்கு பார்த்தாலும் அப்பாஸ்களும், நக்விக்களும், ரிஜ்விக்களும், மௌல்விக்களும் மட்டுமே இருப்பார்கள்.''

எதிர்காலத்தில் நடைபெறப் போவதாக ஊதிப் பெருக்கப்படும் இந்த கோயபல்சுகளின் பொய் பிரச்சாரம் நேரெதிரான விதத்தில் குஜராத்தில் கண்கூடாகக் காணக் கிடக்கிறது. இன்று அங்கே ஜீகன்புராவில் வசிக்கும் முசுலீம்கள் நாராயண்புரா எனும் இந்துப் பகுதிக்கு வேலைக்குச் செல்வதில்லை. செல்ல நேர்ந்தாலும், தாங்கள் முசுலீம் என்பதை சொல்லிக் கொள்வதில்லை. நாளை இந்நாடே இவர்களின் குரு கோல்வால்கர் கண்ட ஆரியக் கனவாக, மோடி நிதர்சனமாக்கிய குஜராத்தாக மாறுமேயானால், அங்கே முசுலீம் என்று மட்டுமல்ல, பகுத்தறிவாளன், சாதி மறுப்பாளன், மொழி உணர்வாளன், கம்யூனிஸ்டு என்று யாரும் சொல்லிக் கொள்ள முடியாது. வீதி தோறும் பஜ்ரங்கிகளும், ரிதம்பராக்களும் காந்தி கண்ட ராமராஜ்ஜியத்தின் தருமகர்த்தாக்களாக நம் வாழ்வின் ஒவ்வொரு அங்குலத்தையும் அதிகாரம் செய்வார்கள்.

மறுகாலனியாக்கக் கொள்கைகளின் கோரத் தாக்குதல் மக்கள் மத்தியில் தோற்றுவித்து வரும் அதிருப்தி அலையை விழுங்கிக் கொள்வதற்கு பார்ப்பன பாசிசம் தம் பதுங்கு குழியிலிருந்து மேலெழும்புகிறது. மக்களின் வெறுப்பை பா.ஜ.க. அறுவடை செய்து கொண்டு ஆட்சி அமைக்குமானால், அந்த ஆட்சி இந்துத்துவத்தின் இன்னுமொரு ஆட்சி என்பதைவிட, குஜராத்தைப் போல, நாடே இந்து ராஷ்டிரத்தின் பரிசோதனைச் சாலையாக மாற்றப்படும் ஆட்சியாக அமையும்.

• அழகு


படிப்பகம்

www.padippakam.com

## பெருந்தொழில் நிறுவனங்களின் 'சமூகப் பொறுப்புணர்வு':

# ஓநாய்களின் திடீர் கரிசனை

**தொ**ழில் நகரமான ஓசூரின் அருகிலுள்ள கொத்தகொண்டப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒரே ஆச்சரியம். ஓசூர் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கிக் கசக்கிப் பிழிந்து, தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்குவதில் முன்னணியில் நிற்கும் டி.வி.எஸ். நிறுவனம், இக்கிராமத்தின் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் சப்பாத்தி உற்பத்தி மற்றும் விற்பனை மையத்தை நடத்தி வருகிறது. 15-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த ஏறத்தாழ 300 பெண்கள் இம்மையத்தில் சப்பாத்தி தயாரிக்கும் வேலை செய்கின்றனர். டி.வி.எஸ். நிறுவனங்களின் தொழிலாளர் உணவகங்களுக்கு மட்டுமின்றி இங்கு தயாராகும் சப்பாத்திகள் பெங்களூரிலுள்ள பீன்யா தொழிற்பேட்டைக்கும் அனுப்பப்படுகிறது.

சப்பாத்தி உற்பத்தி மையம் மட்டுமல்ல; இக்கிராமத்திலும் சுற்றுப்புற பகுதிகளிலும் சமுதாயக் கூடம், ஆரம்ப சுகாதார மையம், பெண்களுக்குத் தையல் பயிற்சி, கிராமங்களில் சாலை அமைத்தல், குடிநீர் கைப்பம்பு அமைத்தல், கிராமப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் எழுப்புதல் என் அடுக்கடுக்காக பல 'சமூக சேவை' களை டி.வி.எஸ். நிறுவனம் செய்து வருகிறது.

டி.வி.எஸ். நிறுவனம் இப்படி திடீர் சமூக சேவையில் இறங்கியுள்ள அதே நேரத்தில், தாமிர உருக்காலை மூலம் நிலத்தையும், நீரையும் காற்றையும் நஞ்சாக்கி வரும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனம், இப்பகுதியிலுள்ள பள்ளி மாணவர்களிடம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இப்பகுதியிலுள்ள சிற்றூர்களில் இலவச கண் சிகிச்சை முகாம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சுயவேலைவாய்ப்பு முதலானவற்றையும் ஸ்டெர்லைட் நிறுவனம் செய்து வருகிறது.

நிரந்தர மரண பயத்தை விளைவித்துள்ள கூடங்குளம் அணுமின்திட்ட நிர்வாகம், கூடங்குளத்தைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளைக் கட்டித் தந்து, சாலைவசதியும் மருத்துவ முகாமும் அமைத்துள்ளது. ஈரோடுக்கு அருகில் இயங்கிவரும் சேஷசாயி காகித நிறுவனம் ஒருபுறம் அந்த வட்டாரத்தையே மாசுபடுத்திக் கொண்டிருக்கும் அதேசமயம், மறுபுறம் சுற்றுப்புற கிராமங்களில் குடிநீர் குழாய் பதித்தும், சாலை - கழிப்பறை - தெருவிளக்கு வசதிகள் செய்து கொடுத்தும் 'அறப்பணி' ஆற்றுகிறது. தொலைக்காட்சி மூலம் தமிழக மக்களை மூளைச்சலவை செய்துவரும் சன் டி.வி. குழுமம், ஆண்டுதோறும் ஏழைகள் சிலரைத் தேர்ந்தெடுத்து இலவசத் திருமணம், சீர்வரிசையாக இரு சக்கர வாகனம், கட்டில், சில்வர் பாத்திரங்களை வழங்கி வருகிறது.

தமிழகத்தின் பெருமுதலாளித்துவ பெருந்தொழில் நிறுவனங்கள் இப்படி 'தருமதுரை'யாக அவதாரம் எடுத்துள்ளபோது, இந்தியாவின் மிகப் பெரிய கணினி மென்பொருள் தரகுப் பெருமுதலாளியான விப்ரோ பிரேம்ஜி, 16 மாநிலங்களில் 13 லட்சம் ஆரம்பப் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில், பள்ளிக் கல்வி மேம்பாடுக்கென பல கோடி நிதி ஒதுக்கியுள்ளார். உள்நாட்டின் சிறுவணிகத்தை அழிக்க வந்துள்ள அமெரிக்க வால் மார்ட் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள பார்தி மிட்டல், தனது பார்தி அறக்கட்டளை மூலம், அடுத்த ஈராண்டுகளில் நாடெங்கும் கிராமப்புற பாலர் பள்ளிகளை நிறுவ ரூ. 200 கோடி ஒதுக்கியுள்ளார். தரகுப் பெருமுதலாளித்துவ மஹிந்திரா நிறுவனம், மஹாராஷ்டிர மாநிலத்தில் புனாவுக்கு அருகே வறட்சி பாதித்த புரந்தர் வட்டத்தில் பழங்குடியினப் பெண்களின் கல்விக்கும் தொழில் பயிற்சிக்கும் பல கோடிகளை ஒதுக்கியுள்ளது. டாக்டர் ரெட்டி லேப்ஸ் நிறுவனம், ஆந்திராவிலுள்ள அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த பல கோடிகளை ஒதுக்கியிருப்பதோடு, விசாகப்பட்டினம், ஐதராபாத் நகரங்களிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு மதிய உணவைத் தயாரித்துக் கொடுக்க தானியங்கி சமையற்கூடங்களை நிறுவியுள்ளது. இது தவிர, ஆந்திராவில் நாற்பதாயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இந்தியத் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் நாட்டு மக்கள் மீது இப்படி திடீர் கரிசனத்துடன் 'சமூக சேவை' செய்யக் கிளம்பியுள்ள போது, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் இன்னும் ஒரு படி மேலே




கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் டி.வி.எஸ். நிறுவனத்தின் 'சமூகப் பொறுப்புணர்வு'.

சென்று இச்சமூக சேவையை விரிவாகச் செய்யக் கிளம்பியுள்ளன. கேரளத்தின் பிளாச்சிமடா கிராமத்தைச் சுடுகாடாக்கி, நெல்லை கங்கை கொண்டானில் தாமிரவருணியை உறிஞ்சி மக்களின் வாழ்வாதாரங்களையே அழித்துக் கொண்டிருக்கும் கொலைகார கோக் நிறுவனம், சென்னையைச் சுற்றியுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை ''வாழ்வின் அமுதம்'' எனும் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. வளரும் குழந்தைகளின் சுவையையே மாற்றியுள்ள காட்பரீஸ் எனும் பன்னாட்டு ஏகபோக நிறுவனம், குவாலியர் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் பாலர் பள்ளிகளையும் ஆரம்பப் பள்ளிகளையும் நடத்துகிறது. பொதுமக்களுக்கு மட்டுமின்றி கால்நடைகளுக்கும் இலவச மருத்துவமுகாம் நடத்துகிறது; பஞ்சாயத்துகளுக்குக் கட்டிடங்களைக் கட்டித் தருகிறது.



''வாழ்வின் அமுதம்'' திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்: தாமிரவருணியைச் சூறையாடும் கொலைகார கோக் நிறுவனத்தின் 'சமூக சேவை'.

இந்துஸ்தான் லீவர் நிறுவனம், மதுரை மாவட்டத்தின் கிராமப்புறங்களில் ''சக்தி திட்டம்'' எனும் பெயரில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் சோப்புக் கட்டி, சலவைத் தூள் விற்பனை செய்து வருவாய் ஈட்ட பெண்களைப் பயிற்றுவிக்கிறது. ஐ.டி.சி. எனும் பன்னாட்டு ஏகபோக சிகரெட் நிறுவனம், ம.பி., ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் குளங்கள், தடுப்பணைகள், குட்டைகளை நிறுவி 15,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து தருகிறது. உலகின் மிகப் பெரிய கோடீசுவர முதலாளியான பில்கேட்சின் மைக்ரோசாப்ட் நிறுவனம், ''சிக்ஷா'' எனும் திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்தாண்டுகளில் 80,000 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் 35 லட்சம் கிராமப்புற மாணவர்களுக்கும் கணினி மென்பொருள் துறையில் பயிற்சி அளிக்கப் போகிறது.

கணிப்பொறிகள், செல்போன்களின் ஐ.சி.களை வடிவமைக்கும் பிரிட்டனின் ஆர்ம் நிறுவனம், தகவல் தொழில்நுட்ப அறிவியலைப் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி, பயிலரங்குகள், பள்ளிகளுக்கு இலவச கணிப்பொறி - மென்பொருள் வழங்குதல் எனப் பல உதவித் திட்டங்களை இந்தியப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. ஹனிவெல் இந்தியா எனும் விமானத் தொழில்நுட்பவியல் நிறுவனம், தனது ஊழியர்கள் மூலம் பெங்களூரைச் சுற்றிலுள்ள கிராமங்களில் மருத்துவ முகாம் நடத்துதல், ஏழை மாணவர்களுக்குச் சீருடை-நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல் என சமூக சேவையில் இறங்கியுள்ளது.

என்ன ஆயிற்று இந்தப் பெருமுதலாளிகளுக்கு? ஏன் திடீரென இவர்கள் சமூக சேவையில் இறங்கியுள்ளார்கள்? ஒருவேளை இவர்கள் அந்தக் காலத்து இங்கிலாந்து முதலாளியான ராபர்ட் ஓவன் போல தொழிலாளர்கள் மீது இரக்கம் கொண்டு கற்பனாவாத சோசலிஸ்டுகளாக மாறிவிட்டார்களா? அல்லது செய்த பாவங்களைப் போக்க புண்ணியம் தேடும் முயற்சியாக இப்படிச் சில தரும காரியங்களைச் செய்கிறார்களா?

**சமூகப் பொறுப்புணர்வு எனும் இப்புதிய உத்தியின் மூலம் பெருந்தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தை ஒடுக்க முடிகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு இதர பிரிவு உழைக்கும் மக்களிடம் தார்மீக ஆதரவையும், எதிர் போராட்டத்தையும் கட்டியமைக்க முடிகிறது.**

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாகவே இப்பெரு முதலாளிகள் இப்போது உழைக்கும் மக்கள் மீது திடீர்க் கரிசனை காட்டுகிறார்கள். இதைத் தமது நிறுவனங்களின் திட்டமாக அறிவித்து செயல்படுத்தவும் தொடங்கியுள்ளார்கள். இதைத்தான் பெருந்தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு (Corporate Social Responsibility) என்று முதலாளித்துவ முதறிஞர்களும் ஆட்சியாளர்களும் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர்.

ஏற்கெனவே நிலப்பிரபுக்கள் கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்துவது, மண்டகப்படி நடத்துவது அல்லது மின்சார விளக்குகள் பொருத்தி ''உபயம்'' என விளம்பரப்படுத்திக் கொள்வது என்று வள்ளல் அவதாரம் போடுகின்றனர். சில பெருமுதலாளிகள் பள்ளிகளுக்கு நன்கொடை தருவது, ரத்த தான முகாம் நடத்துவது, ஆகஸ்ட் 15 அன்று இனிப்பு வழங்குவது என்று தான தருமங்களைச் செய்கின்றனர். ஆனால், அவ்வப்போது கருப்புப் பணத்தை மறைக்க செய்யப்படும் இத்தகைய சமூகசேவைகள் இப்போது பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் கொள்கைத் திட்டமாகவே செயல்படுத்தப்படுவதற்கு காரணம் என்ன?

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் தொடரும் மறுகாலனியாக்கச் சூறையாடலால் உலகெங்கும் பேரழிவுகளும் அதற்கெதிராக உழைக்கும் மக்களின் கலகங்களும் பெருகி வருகின்றன. மறுகாலனியாக்கச் சூறையாடலால் தீவிரமாகிவிட்ட வறுமை, வேலையின்மை, பட்டினிச்சாவுகள், சுற்றுச்சூழல் முறைகுலைவுகளால் கொதித்தெழும் மக்கள் போராட்டங்கள் வெள்ளமாகத் திரண்டெழும் முன்னே, அதற்கு வடிகால் வெட்டி சாந்தப்படுத்தி திசைதிருப்ப ஏகாதிபத்தியவாதிகள் கண்டுபிடித்துள்ள புதிய உத்திதான் இத்தகைய சமூக சேவைத் திட்டங்கள்.

பெருந்தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப்

www.padippakam.com

போராடுகிறார்கள் என்றால், அப்போராட்டத்தைத் தனிமைப்படுத்தி ஒடுக்கவும், தொழிலாளர்களுக்கு எதிராக இதர பிரிவு உழைக்கும் மக்களை ஆத்திரமூட்டவும் இத்தகைய உத்தி உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளுக்குத் தேவையாக உள்ளது. உதாரணமாக, ஒசூர் டி.வி.எஸ். நிறுவனம், தொழிலாளர் போராட்டத்தால் தற்காலிகமாக கதவடைப்பு செய்யப்பட்டால், அங்குள்ள தொழிலாளர் உணவகங்களும் மூடப்படும். இதனால் உணவகங்களுக்கு சப்பாத்தி தயாரித்து அனுப்பும் மகளிர் சுயஉதவிக் குழு மையமும் முடங்கி, அங்கு பணிபுரியும் கிராமப் பெண்களுக்கு வருவாய் இழப்பும் ஏற்படும். இதைக்காட்டி, ''உங்கள் பிழைப்பில் மண்ணை அள்ளிப் போடுவது தொழிலாளர்கள்தான்!'' என்று எதிர்ப் பிரச்சாரம் செய்து, போராடும் தொழிலாளர்களுக்கு எதிராக சப்பாத்தி உற்பத்தி மையத்தின் ஊழியர்களை டி.வி.எஸ். நிர்வாகம் கொம்பு சீவிவிடும். இதுதவிர சுற்றுப்புற கிராமங்களில் செய்துள்ள 'சமூக சேவை'யைச் சாதகமாக்கிக் கொண்டு, அப்பகுதியிலுள்ள உழைக்கும் மக்களிடம் தொழிலாளர் போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறைக்கு தார்மீக ஆதரவையும், அடியாள் படையையும் திரட்டிக் கொள்ளும்.




ஆடுகள் மீது ஓநாய்க்கான திடீர் அக்கறை: தமது மழைநீர் சேகரிப்புத் திட்டத்தால் ம.பி.யின் கல்யாண்பூர் கிராம மக்கள் பயனடைந்துள்ளதாக ஐ.டி.சி. நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பரம்.

சுருக்கமாகச் சொன்னால், இப்புதிய உத்தியின் மூலம் பெருந்தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தை ஒடுக்க முடிகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு இதரபிரிவு உழைக்கும் மக்களிடம் தார்மீக ஆதரவையும், எதிர்போராட்டத்தையும் கட்டியமைக்க முடிகிறது; தமது சுரண்டல் கொள்ளையையும், அடக்குமுறையையும் மூடிமறைத்து சமூக அக்கறை கொண்ட தருமதுரையாக நாடகமாட முடிகிறது. ''நம்ம முதலாளி, நல்ல முதலாளி'' என்று ஒடுக்கப்பட்டு சுரண்டப்படும் மக்களையே துதிபாட வைக்க முடிகிறது; மனிதமுகம் கொண்ட தொழில்வளர்ச்சி என்று மாய்மாலம் செய்ய முடிகிறது.

இத்தகைய 'சமுதாயப் பொறுப்புணர்வு'த் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு இந்திய அரசின் கொள்கைகள் மாற்றப்பட்டுள்ளன. 11-வது ஐந்தாண்டுத் திட்டம், பெருந்தொழில் நிறுவனங்களின் இத்தகைய சமூகசேவையை நாட்டின் பல்வேறு சமூக நலத் திட்டங்களில் பயன்படுத்திக் கொள்ளுமாறு பரிந்துரைக்கிறது. பெருந்தொழில் நிறுவனங்கள் தமது வருவாயில் 2% அளவுக்கான தொகையை இத்தகைய சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களுக்கு செலவிடவும் முன் வந்துள்ளன.

டைம்ஸ் பவுண்டேசன், பிரிட்டிஷ் கவுன்சில் முதலான அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்கள், இந்தியாவில் இத்திட்டத்தை வளர்த்தெடுக்கவும் விரிவுபடுத்தவும் இங்குள்ள வெளிநாட்டு - உள்நாட்டு பெருந்தொழில் நிறுவனங்களுக்கு பயிற்சி வகுப்புகளையும் கருத்தரங்குகளையும் நடத்துகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் தொழில்-வர்த்தகத்துக்கும் சமூகத்துக்குமிடையிலான உறவு மேம்பட்டு, சமூக அமைதி நிலவும் என்று டைம்ஸ் பவுண்டேசன் போதிக்கிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் தமது லாபத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதால், தமது வருவாயில் 5% வரை இத்திட்டங்களுக்குச் செலவிடுமாறு பிரிட்டிஷ் கவுன்சில் உபதேசிக்கிறது.

இத்திட்டங்களை மக்களிடம் விளம்பரப்படுத்தி ஆதரவு திரட்ட ஊடகங்களையும் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ''ஹிந்து'' பத்திரிகை குழுமத்தின் ''பிசினஸ் லைன்'' நாளேடு அண்மையில் ரிலையன்ஸ், இந்துஸ்தான் லீவர், லீ மெரிடியன் முதலான உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களுடன் இணைந்து சென்னையில் பயிற்சிப் பட்டறையை நடத்தியது. இந்தியா மட்டுமின்றி ஆசிய நாடுகள் அனைத்திலும் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் ''சி.எஸ்.ஆர். ஆசியா வீக்லி'' எனும் வாரப் பத்திரிகையும் தொடங்கப்பட்டுள்ளது.

சாலைகள், இருப்புப் பாதைகள், நாடாளுமன்றம், ஆங்கிலேய அடிமைச் சிந்தனைக்கேற்ற மெக்காலே கல்வி முறை என்று பிரிட்டிஷ் காலனியாதிக்கம் புதிய அணுகுமுறையுடன் நமது நாட்டையும் மக்களையும் அடிமைகளாக்கி நீண்ட காலம் அடக்கியாண்டது. காலனியாதிக்கத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட இந்திய நாட்டு மக்களும் பங்கேற்கும்படி உள்ளாட்சி அமைப்புகளை நிறுவி, இந்திய மக்களாலேயே ''ரிப்பன் எங்கள் அப்பன்'' என்று துதிபாட வைத்தது. அதே உத்தியோடு இப்போது மறுகாலனியாக்கம், பெருந்தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. அன்றைக்கு ஒரு ரிப்பன் என்றால், இன்றைக்கு பில்கேட்ஸ், விப்ரோ பிரேம்ஜி, மிட்டல், டாக்டர் ரெட்டி என பல நூறுபேர்.

மனித முகம் கொண்ட மறுகாலனியாக்கம் என்ற ஒரு புதிய சதி வேகமாக அரங்கேறி வருகிறது. சமூக சேவையின் பெயரால் உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு ஆதிக்கம் செய்யத் துடிக்கும் ஏகாதிபத்திய சதியை, மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் போராடி வரும் உழைக்கும் மக்கள் விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும். தொழிலாளி வர்க்கம் இதர பிரிவு உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராடுவதன் மூலமே இத்தகைய ஏகாதிபத்திய சதிகளைத் தகர்த்தெறிந்து, மறுகாலனியத் தாக்குதலை முறியடிக்கவும் முடியும்.

• பாலன்


படிப்பகம்

www.padippakam.com

### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

**இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச் சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் எட்டாம் பகுதி.**

**தா**ழ்த்தப்பட்ட-பழங்குடி இன மக்களுக்கு இழைக்கப்படும் 15 வகையான சாதிய-சமூகக் கொடுமைகளையும் அக்கிரமங்களையும் நுட்பமாகவும் அனுபவப்பூர்வமாகவும் உணர்ந்து தொகுத்து, வன்கொடுமைகள் என்று வரையறுத்து அவற்றுக்குரிய தண்டனைகளையும் பட்டியலிட்டிருக்கிறது வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்.

அதுமட்டுமல்ல, வேறு எந்த குற்றத் தண்டனைச் சட்டத்திலும் இல்லாதவாறு பின்வரும் பிரிவுகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளடக்கியுள்ளது.

1. தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி இனத்தவர் ஒருவருக்கு மரணதண்டனை கிடைக்குமாறு, அந்த நோக்கத்தோடு பொய்ச்சாட்சியம் சொல்வதும் அல்லது புனைவதும் ஆயுள் சிறைத் தண்டனையோடு அபராதமும் விதிக்கப்படக்கூடிய குற்றமாகும். அப்படிப்பட்ட பொய்ச் சாட்சியத்தாலோ, புனைவாலோ தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தவர் ஒருவர் மரண தண்டனைக்குப் பலியாக நேருமானால் அதைச் செய்தவருக்கும் அதே தண்டனை வழங்கப்படும்.

2. தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் ஏழாண்டோ அதற்கு மேலோ தண்டிக்கப்படுமாறு குற்றம் புரிந்ததாய், அவ்வாறான தண்டனை பெற்றுத் தரும் நோக்கத்தோடு பொய்ச் சாட்சியம் சொல்வதும் அல்லது புனைவதும் அதே அளவு தண்டிக்கப்படும் குற்றமாகும்.

3. தீயினாலோ அல்லது ஏதேனும் வெடிபொருளினாலோ தாழ்த்தப்பட்ட சாதி அல்லது பழங்குடியினத்தவர் ஒருவரின் சொத்துடைமைக்குச் சேதம் விளைவிப்பது ஆறு மாதத்துக்கும் குறையாத ஏழாண்டு வரையிலான சிறைத்தண்டனையோடு அபராதத்துக்குரியதாகும்.

4. தீயினாலோ அல்லது ஏதேனும் வெடிபொருளினாலோ தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினத்தவரின் வழிப்பாட்டிடத்தையோ, வசிப்பிடத்தையோ, உடைமைக் காப்பிடத்தையோ, அல்லது அவர் வழக்கமாகப் பயன்படுத்துமிடத்தையோ அழிப்பதும் அல்லது அந்த நோக்கத்துடன் செயல்படுவதும் ஆயுள் தண்டனை மற்றும் அத்துடன் அபராதம் விதிக்கக்கூடிய குற்றமாகும்.

5. தாழ்த்தப்பட்ட சாதி அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவே ஒருவருக்கோ அவருக்குச் சொந்தமான உடைமைக்கோ எதிராக பத்தாண்டு அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கத்தக்க குற்றம் புரிபவருக்கு ஆயுள் சிறைத்தண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

6. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளவரைக் காப்பாற்றும் நோக்குடன் அக்குற்றச் செயலுக்கான சான்று ஆதாரத்தை அழிப்பதும் மற்றும் தெரிந்தே பொய்த் தகவல் தருவதும் அந்தக் குற்றத்துக்கு வகை செய்யப்பட்டுள்ள தண்டனைக்குரிய குற்றமாகும்.

**தீண்டாமை குறித்த இந்திய மக்கள் தீர்ப்பாயம் என்ற அமைப்பு நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்ட பாந்த் சிங் (இடமிருந்து இரண்டாவது). மேல்சாதி வெறியர்கள் நடத்திய தாக்குதலால் பாந்த் சிங்கின் கைகளும், கால்களும் துண்டிக்கப்பட்டுவிட்டன.**





"பீயைத் திங்க வைத்துக் கொன்று விடுவோம்" என யாதவ் சாதிவெறியர்களால் மிரட்டப்பட்ட பீகாரைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுவன் கௌதம் ரவிதாஸ்.

**வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தைக் கடுமையாகவும், கறாராகவும், சீரிய முறையிலும் அமல்படுத்துவதற்காக மேலும் பல சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. ஆனால்...**

7. அரசு ஊழியராய் இருந்து இந்த வன்கொடுமைச் சட்டப்பிரிவின் கீழ் குற்றமாகிய ஒன்றைப் புரிவாரானால், அவருக்கு ஓராண்டுக்குக் குறையாத, அக்குற்றத்துக்கென வகை செய்யப்பட்டுள்ள தண்டனைக் காலம் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

- இவ்வாறு தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தவருக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக் கூறி தண்டிப்பதற்கு காரணமாக இருப்பதும் குற்றமாகிறது; அவருக்கு எதிரான குற்றங்களை மறைப்பதும், அக்குற்றம் புரிந்தவரைக் காப்பதும், அதற்கான சான்றாதாரத்தை அழிப்பதும் கூட தண்டனைக்குரிய குற்றமாகிறது.

மேலும், இச்சட்டத்தின்படி அரசு ஊழியர் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புறக்கணிப்பதும், ஆறுமாதத்துக்குக் குறையாத, ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகிறது.

அதுமட்டுமல்ல; இச்சட்டத்தின் கீழ்வரும் குற்றத்தை மறுமுறையோ அதன் பிறகோ, மீண்டும் புரிவது மேலும் கூடுதலாக ஓராண்டிற்குக் குறையாத, அக்குற்றத்துக்கென வகை செய்யப்பட்டுள்ள தண்டனை காலம் வரையிலான சிறைத் தண்டனைக்குரியதாகும்.

இதோடு இந்தியத் தண்டனைச் சட்ட விதிகளின் கீழ்வரும் பிரிவு 34, அத்தியாயங்கள் 3,4,5,6 மற்றும் பிரிவு 149 அத்தியாயம் 7-இன் கீழ் வரும் விதிகள், இ.த.ச.வின் நோக்கங்களுக்குப் பொருந்துமாறு தண்டிக்கப்படும்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைக் கடுமையாகவும், கறாராகவும், சீரிய முறையிலும் அமல்படுத்துவதற்காக மேலும் பல சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி,

- இச்சட்டத்தின் கீழான வழக்குகளைத் துரிதமாக விசாரணை நடத்தி முடிக்கும் பொருட்டு மாநில அரசானது உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெற்று ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஓர் அமர்வு நீதிமன்றத்தைத் தனிச்சிறப்பு நீதிமன்றமாக அமைத்து அதிகாரபூர்வ அரசிதழில் அறிவிப்பு செய்யவேண்டும்.

- ஒவ்வொரு தனிநீதி மன்றத்துக்கும், மாநில அரசானது வன்கொடுமைத் தடுப்பு வழக்குகளை நடத்தும் பொருட்டு தனி அரசு வழக்குரைஞராக ஓர் அரசு வழக்குரைஞரைக் குறிப்பிடலாம் அல்லது ஏழாண்டுக்குக் குறையாமல் வழக்கறிஞராக பணிபுரிபவரை நியமிக்கலாம்.

- இச்சட்டத்தின்படி கூட்டு அபராதம் விதிக்கவும் வசூலிக்கவும் 1955-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான வழிவகைகள் பொருந்தும்.

- தனிநீதிமன்றம் பிறப்பித்த ஆணையை எவராவது மீறினால் அவருக்கு ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படியான தண்டனையை மேலும் கறாராக்கும் பொருட்டு குற்றம் புரிவோரின் உடமைகளைப் பறிமுதல் செய்வதற்கான வழிவகையும் உள்ளது.

- இச்சட்டத்தின்படி குற்றம் புரிந்த ஒருவரைத் தண்டிக்கும்போது, அக்குற்றத்தைச் செய்வதற்கு உதவிய அவரது உடைமை, அசையுஞ் சொத்து, அசையாச் சொத்து போன்றவற்றைப் பறிமுதல் செய்யும்படி ஆணையிடலாம்.

- இச்சட்டத்தின்படியான குற்ற வழக்கை விசாரிக்கும் போதே குற்றஞ்சாட்டப்பட்டவரின் அசையுஞ்சொத்து மற்றும் அசையாச் சொத்துக்களைக் கைப்பற்றி வைக்கும்படி ஆணையிடலாம். குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்

ஆதிக்க சாதி இந்துக்களால் துன்புறுத்தப்பட்டதால், சிறுவாய் கிராமத்தைவிட்டே வெளியேறிவிட்ட அக்கிராமத் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் முத்துகிருஷ்ணன்.



www.padippakam.com

கப்படும்போது விதிக்கப் படும் அபராதத்தை வசூ லிக்கத் தேவையானவாறு ஏற்கெனவே கைப்பற்றப் பட்ட சொத்து பறிமுதலுக் குரியதாகும்.

வன்கொடுமைத் தடுப் புச் சட்டத்தின்படி, குற்றம் புரிபவருக்கு நிதியுதவி அளிப்பதும் குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததா கவே கருதப்படும். வன் கொடுமைக் குற்றம், எதன் தொடர்பாகவும், தொடர்ச்சி யாகவும் நிகழ்த்தப்படு கிறதோ, அந்த நோக்கத்துக் காகவே, குறிக்கோளுக்கா கவே குற்றமிழைத்ததாகக் கருதப்படும்.



சேலம் மாவட்டத்திலுள்ள கொத்தம்பாடி கிராம தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவி கலாவதி, தனது அலுவல்களைச் செய்ய விடாமல், தான் மேல்சாதி வெறியர்களால் தடுக்கப்படுவதை வேதனையோடு விவரிக்கிறார்.

வன்கொடுமைக் குற்றம் நிகழாமல் இருப்பதற்கான முன் நடவடிக்கையாக, குற்றம் புரியக் கூடும் என்று கருதப்படும் ஒருவரை, தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியி னர் பகுதிகளின் இருந்து வெளியேற்ற வும், இரண்டாண்டு காலம்வரை அவர் அப்பகுதிக்குள் நுழைவதைத் தடை செய்யவும் ஆணையிட முடியும். இவ் வாறான வெளியேற்ற உத்தரவை ஏற்று வெளியேறத் தவறினாலோ, வெளி யேற்ற உத்தரவில் குறிப்பிடப்படும் காலத்திற்குள் அப்பகுதியில் நுழைந் தாலோ தனிநீதிமன்றம் அவரைக் கைது செய்யும் ஆணை பிறப்பிக்கலாம்.

மேற்கண்ட விதிகளின்படி ஒரு பகு தியை விட்டு வெளியேற்றப்படும் ஒரு வரை அளவெடுக்கவும், படமெடுக்க வும் போலீசுக்கு அதிகாரமளிக்கப்படு கிறது; அதற்கு அவர் எதிர்ப்போ, மறுப்போ காட்டினால் எல்லா வழி முறைகளையும் பயன்படுத்த சட்ட ரீதியான அதிகாரம் உள்ளது; மேலும், அவ்வாறு எதிர்ப்பதும் மறுப்பதும் குற் றமாகும்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத் தின் கீழ் தனிநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணையை எவராவது மீறினால் ஓராண்டு வரையிலான சிறையும் அப ராதமும் விதிக்கப்படும். மேலும், இச் சட்டத்தின்படி குற்றமிழைப்பவர்க ளுக்கு எதிராகக் கூட்டு அபராதம் விதிக்கவும், வசூலிக்கவும் 1955-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாது காப்புச் சட்டத்தின் கீழ் உள்ள வழி வகைகள் இதற்கும் பொருந்தும்.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவ ருக்கு வழக்கமான குற்றவி யல் விசாரணை முறைச் சட் டத்தின் பிரிவு 438-இல் கூறியுள்ள உரிமைகள் பற் றிய எதுவும் பொருந்தாது. அதோடு இச்சட்டத்தின்படி குற்றவாளியெனத் தீர்ப்ப ளிக்கப் பெறுகிற ஒருவ ருக்கு, குற்றவியல் விசா ரணை முறைச் சட்டம் பிரிவு 360-இன் வழிவகைகளும் 1958-ஆம் ஆண்டின் குற்ற வாளிகள் நன்னடத்தைச் சட் டத்தின் வுழிவகைகளும் பொருந்தாது.

இவைதவிர, வன்கொ டுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களில் இருந்து தாழ்த் தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்க ளைப் பாதுகாப்பதற்கான பல முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ள போலீசு அதிகாரிகளுக்கும், பல சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட் டுள்ளன. அவர்கள் செயல்படவேண் டிய முறைகளும் - விசாரணை, கண் காணிப்பு மற்றும் அறிக்கை சமர்ப்பித் தல், மேலதிகாரிகள் மேற்பார்வையிடு தல், வன்கொடுமைகள் நிகழாவண் ணம் பாதுகாப்பதில் அரசு மற்றும் அதி காரிகளின் கடமைகள், பொறுப்புகள் - அதற்கான சிறப்பு அதிகாரங்கள் பற்றி யும் இச்சட்டம் வரையறுத்துள்ளது.

- தொடரும்

வெளிவந்து விட்டன!



பதினான்காம் ஆண்டு
தமிழ் மக்கள் இசை விழா
ஒளிக் குறுந்தகடுகள் (DVD)

- கருத்தரங்க உரைகள் - ரூ. 50/-
- கலைநிகழ்ச்சிகள் - ரூ. 50/-

அஞ்சல் (கூரியர்) செலவு - ரூ. 25/-



குறுந்தகடுகள் வேண்டுவோர் தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

இரா. சீனிவாசன், எண். 16, முல்லை நகர் வணிக வளாகம்,
இரண்டாவது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 600 083.
தொலைபேசி: 044-2836 0344

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மாறாக, ''வங்கிக் கடனைத் திருப்பித் தருகிறாயா, இல்லை கம்பி எண்ணப் போகிறாயா?'' என மிரட்டத் தொடங்கியி ருக்கிறது.

ஆந்திர மாநிலம் - அனந்தபுர் மாவட்டத்தைச் சேர்ந்த திராட்சை விவசாயி நல்லப்ப ரெட்டி, சமீபத்தில் கைது செய் யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். வங்கிக் கடனை உரிய காலக் கெடுவுக்குள் அடைக்கத் தவறியதுதான் இவர் செய்த குற்றம்.

நல்லப்ப ரெட்டி விவசாயத்திற்காக வங்கியில் வாங்கிய கடன் 24,000/- ரூபாய் தான். கந்துவட்டிக்காரர்களிடம் 34,000/- ரூபாய் கடன் வாங்கி, வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முயன்றார், அவர். ஆனால், வங்கியோ, வட்டி யோடு சேர்த்து ஒரு இலட்ச ரூபாய் கட்டத் தவறியதற்காக அவரைச்சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டது.

கதிரி மண்டலைச் சேர்ந்த கெங்கி ரெட்டி, ''கடனுக்கு ஈடாக தனது ஆறு ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொள்ளுமாறு'' வங்கி அதிகாரிகளிடம் மன்றாடினார். ஆனால், அதிகாரி களோ, ''பணம் இல்லையென்றால், ஜெயில்'' எனக் கறாரா கச் சொல்லி, அவருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை வாங் கித் தந்துவிட்டனர். சிறையில் இருந்து விடுதலையான பிறகு, பாசன வசதிமிக்க தனது ஆறு ஏக்கர் நிலத்தை விற்று வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தினார், கெங்கி ரெட்டி.



ஒரு பக்கம் கணவரின் தற்கொலை; இன்னொருபுறம் பி.டி. பருத்தி விதையால் ஏற்பட்ட நட்டம் என்ற இரட்டை இடியைத் தாங்கிக் கொண்டு நிற்கும் கமலாபாய் குதே. விவசாயத்தில் பட்ட கடனை அடைக்கக் கூலி வேலை செய்யும் இவருக்குக் கிடைக்கும் ''சம்பளம்'' வெறும் 25 ரூபாய் பெறுமான சோளம்தான்.

மகபூப் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு விவசாயிகள் (ஒருவர் தாழ்த் தப்பட்டவர்; மற்றொருவர் பிற்படுத் தப்பட்டவர்) இந்திய அரசு வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தா ததற்காக, சாதி வேறுபாடு பார்க்காமல், அதிகாரிகளால் சிறைக்குள் தள்ளப்பட் டனர். உலக வங்கிக்கு மிகவும் நெருக்க மாக இருந்த சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தக் கைது நடவடிக்கை, காங்கிரசு ஆட்சியில் தீவிரம் அடைந்திருப்பதா கக் குமுறுகிறார்கள், ஆந்திர விவசாயி கள்.

விவசாயத்தில் இருந்து போதிய வருமானம் கிடைப்பதில்லை என்பது உண்மை என்றாலும், சட்டமும், நீதி மன்றமும் தங்களின் கடமையைச் செய் வதைத் தடுக்க முடியாது என அதிகாரி கள் நியாயவான்களைப் போலப் பேசு கிறார்கள். ஆனால், இந்தச் சட்டமும், நீதிமன்றமும் வங்கிக் கடனை வாங்கி ஏப்பம் விட்ட எத்தனை தொழில் அதி பர்கள் மீது பாய்ந்திருக்கிறது? ஆந்தி ராவைச் சேர்ந்த 200 முக்கிய புள்ளிகள் வங்கிகள் மூலம் 1,000 கோடி ரூபாய் கடனை வாங்கி ஏப்பம் விட்டிருப்பதை ஆந்திர அரசே அம்பலப்படுத்திய பிற கும், அவர்களுள் ஒருவர்கூட இன்று வரை கைது செய்யப்படவில்லை.

''அரசாங்கம், விவசாயத்தை முத லாளிகளிடம் ஒப்படைக்க விரும்புகி றது'' என்கிறார், சாய்நாத் ரெட்டி என் கிற விவசாயி. இதற்காகத்தான், ஒப் பந்த விவசாயம், விவசாய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்; ஏற்றும திக்காக பழச் சாகுபடி செய்தால் 70 சத வீத மானியம்; மல்பெரி சாகுபடிக்கு மானியம்; ரிலையன்ஸ், வால் மார்ட் போன்ற நிறுவனங்களுக்கு விவசாயிக ளைக் குத்தகைதாரர்களாக மாற்றுவது எனப் பல திட்டங்களை அரசு அறி வித்து வருகிறது.

ஏழை - நடுத்தர விவசாயிகளை தரகு முதலாளிகளின் பிடியில் சிக்க வைக்கும் இக்கவர்ச்சித் திட்டங்க ளுக்கு மயங்காமல், தன் சொந்தக் காலில் நின்று விவசாயம் செய்யத் துணிந்தால், அவர்களை அச்சுறுத்துவ தற்காகவே, ''கடன் வசூல், கைது, சிறைத் தண்டனை'' என்ற குண்டாந்தடி களைத் தூக்கிக் கொண்டு திரிகிறது, ஆளும் வர்க்கம்.

விவசாயத்தில் ஏற்பட்ட நட்டத்தால் கணவர் தற்கொலை செய்து கொண்ட பிறகும் விவசாயத்தின் மீது நம்பிக்கை இழக்காத பந்தி இலட்சுமம்மா மற்றும் அவரது மகன் கோபால்.



● இரணியன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08
www.padippakam.com

"சில்லறை வணிகத்தில் ரிலையன்ஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் நுழைவதால், சிறு வியாபாரிகளுக்கு எந்தப் பாதிப்பும் வராது" என ஆளும் கும்பலும், அவர்களது எடுபிடிகளும் நடத்தி வரும் பிரச்சாரத்திற்கு, சிறுவணிகர்கள் ஏமாந்து போய்விடவில்லை.

மக்கள் கலை இலக்கியக் கழகமும் அதன் தோழமை அமைப்புகளும், சிறு வணிகர்களின் ஆதரவோடு, மே 1, தொழிலாளர் தினத்தன்று, சென்னையில் ரிலையன்ஸ் ஃபிரஷ் முற்றுகைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தின.

மே 5 அன்று சேலத்தில் நடந்த தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநாட்டில், சிறு வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கக் கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சில்லறை வணிகத்தில் இறங்கியுள்ள ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஈரோடு மாவட்டம் முழுவதும் காய்கறி வியாபாரிகள், தள்ளுவண்டி சிறு வியாபாரிகள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து மே 18-ஆம் நாளன்று கடையடைப்புப் போராட்டம் நடத்தியதோடு, ஈரோடு நகரில் மாபெரும் கண்டன ஊர்வலத்தையும் நடத்தியுள்ளனர்.

ஜார்கண்டு மாநிலத் தலைநகர் ராஞ்சியில், மே 12 அன்று, சிறு வணிகர்களும், காய்கறி வியாபாரிகளும் இணைந்து ரிலையன்ஸ் பிரெஷ்ஷுக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் பொழுது, அவர்கள் ரிலையன்ஸின் கடைகள் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தியதோடு, அக்கடைகளுக்குள் நுழைந்து கலகத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ராஞ்சி நகரிலுள்ள ஐந்து ரிலையன்ஸ் ஃபிரெஷ் கடைகளையும் இனி போலீசு பாதுகாப்போடுதான் நடத்த முடியும் என்ற அச்சுறுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில், காய்கறி வியாபாரிகள் மே 20 அன்று முகேஷ் அம்பானியின் உருவ பொம்மையை எரித்துத் தங்களின் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

சிறு பொறியாக எழுந்துள்ள இப்போராட்டங்களை "வன்முறை" என்றும், வளர்ச்சிக்கு எதிரானவை என்றும் ஆளும் கும்பல் அவதூறு செய்து வருகிறது.



# ரிலையன்ஸ் ஃபிரெஷ் எதிர்ப்பு: வாழ்வுரிமைக்கான போராட்டம்



இந்தியாவில் ஏறத்தாழ 4 கோடி குடும்பங்கள் சிறு வணிகத்தை நம்பித்தான் வாழ்க்கையை ஓட்டி வருகின்றன. சில்லறை வணிகத்தில் நுழைந்துள்ள அம்பானியும், டாடாவும், பிர்லாவும், பாரதியும், அவர்களின் ஏகாதிபத்தியக் கூட்டாளிகளான வால் மார்ட்டும், காரஃபோரும் இந்த 4 கோடி குடும்பங்களை அழித்துத்தான், 12 இலட்சம் கோடி ரூபாய் புரளும் சில்லறை வணிகச் சந்தையைக் கைப்பற்றத் திட்டம் போடுகின்றன. நான்கைந்து முதலாளிகளின் கொள்ளை இலாபத்திற்காக, 4 கோடி குடும்பங்கள் அழிக்கப்படுவது வன்முறை இல்லையாம்; அது பொருளாதார வளர்ச்சியாம்! தனியார்மய - தாராளமயத்தின் நீதி எப்படியிருக்கிறது பாருங்கள்.

சட்டமே, இந்தச் சந்தை பயங்கரவாதத் தாக்குதலைப் பாதுகாக்கும் பொழுது, நாம் ஏன் இந்தச் சட்டத்திற்கு அடிபணிந்து நடந்து கொண்டு போராட வேண்டும்? சட்டத்தையும், ஓட்டுக் கட்சிகளையும் புறக்கணித்து விட்டு, கலகத்திலும், போராட்டத்திலும் இறங்குவதன் மூலம் மட்டுமே, இச்சந்தை பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும்.

ராஞ்சி நகர சிறு வியாபாரிகள் ரிலையன்ஸ் பிரெஷ்ஷுக்கு எதிராக நடத்தியிருக்கும் "சட்டத்தை மீறிய வன்முறை போராட்டம்" இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகிறது. •